தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
மற்றம்
விலை ரூ.15 – மலர் 21 – இதழ் 03 – ஜூலை 2019
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்புமிகு செயல்பாடுகள்...

■ பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜூலை-2019

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்தித்து, பல்வேறு கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சியைத் தருகிறது. இம்முறையும் பயனுள்ள கருத்துக்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது அனைவரும் அறிந்ததுதான். அதன் படியே பெண்கள் நினைத்தால் வீட்டை மட்டுமல்ல நாட்டையே மாற்ற முடியும் என்பதற்கு ஏராளமான முன் உதாரணங்கள் உள்ளன. அதன் காரணமாகத்தான் எனது மனதில் தோன்றிய மற்றொரு கருத்தையும் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என அனைத்து உயிரினங்களுக்கும் தண்ணீர் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகு அத்தியாவசியமான தண்ணீரை மழையானது நமக்கு கொடையாக அளித்து வருகிறது. தற்போது கோடைக்காலம் முடிந்து மழைக்காலம் துவங்கப் போகிறது. மாநிலத்தில் ஒருசில மாவட்டங்களில் கோடை மழை பெய்து வருவது சிறப்புக்குரியது. ஒருவேளை பருவ மழை பொய்த்து போனால், போதுமான அளவு மழை பெய்ய வாய்ப்பில்லை. எனவே வரும் காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலை நம் தமிழகத்தில் மட்டுமின்றி, நாட்டின் பல மாநிலங்களிலும் நிலவ வாய்ப்புள்ளது. ஆகவேதான் தமிழக அரசும் அதற்கு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதிலிருந்தே எடுத்து வருகிறது. அரசுடன் நாமும் இணைந்து செயல்பட்டால்தான் தண்ணீர் பற்றாக்குறை பெருமளவு ஏற்படாமல் முன்னரே தடுக்க முடியும்.

அதற்காக, இயற்கை நமக்கு கொடையாக அளித்திருக்கும் மழை நீரை உரிய முறையில் சேமிக்கும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். வீடுகளில் அமைத்துள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை முறையாகப் பராமரித்தல், மழைநீர் வடிகால் பகுதிகளான குளங்களை, ஏரிகளை, ஆறுகளை புனரமைத்து பராமரித்தல், கால்வாய்களை சீரமைத்தல், நீராதாரங்களான ஆறு, ஏரி, குளம், குட்டை, கிணறு போன்றவற்றில் மாசு ஏற்படுத்தாமல் பாதுகாத்தல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் நீரை சேமித்து வைத்து, எதிர்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமல் நம்மை நாமே பாதுகாத்துக் கொண்டு இந்நாட்டையும் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்ல முடியும்.

அதற்கு வீடுகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்து வதுடன், நாம் பயன்படுத்திய நீரை நாமே மறுசுழற்சி செய்யும் முயற்சிகளிலும் ஈடுபடலாம். சுய உதவிக் குழு உறுப்பினராக இருந்து நீங்கள் இத்தகு செயல்பாடுகளில் ஈடுபட்டு மற்றவர் களுக்கு முன்னுதாரணமாக இருப்பீர்கள் என்றால் இதுவே இந்நாட்டின் வளர்ச்சிக்கு முதற்படியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

சுய உதவிக் குழு உறுப்பினர்களாக இருந்து நீங்கள் செய்த சாதனைகளையும், படைப்புகளையும் எடுத்துக் கூற வேண்டும் என்றால் ஏராளமானவற்றை கூறலாம். நீங்கள் மேலும் பல்வேறு துறைகளில் வெற்றிகளைப் பெற்று, முன்னேற்றத்திற்கான பாதையில் துவளாமல் தொடர்ந்து வீருநடைபோட வேண்டும் என்பது என் விருப்பம்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்புமிகு செயல்பாடுகள் 05

வெள்ளப் பேரிடர் கால நிவாரணப் பணிகளில் சுய உதவிக் குழு மகளிரின் செயல்பாடுகள் 14

நாங்களும் சாதனையாளர்களே! சாதித்துக் காட்டிய திருநங்கையர் 18

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகள் 19

வாழ்வில் முன்னேற்றம் தந்த மகளிர் திட்டம் 21

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

வங்கிகளில் கல்விக் கடன் பெறுவது எவ்வாறு? 24

குறளும்-பொருளும்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

அனைத்து எழுத்துகளும் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைப்போல உலகமும் ஆதிபகவனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnaduwomen.net/mutram

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 21
இதழ் 03
ஜூலை 2019
விலை ரூ.15

● **கௌரவ ஆசிரியர்கள்**

திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

● **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

● **நிர்வாக ஆசிரியர்**

எஸ். ஜானகி, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **நிதி நிர்வாகம்**

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **பொறுப்பாசிரியர்:**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● துணை ஆசிரியர்: **ஏ. கண்ணன்**

● முதுநிலை கணக்காளர்: **சு. சசிகலா**

● பிழை திருத்துபவர்: **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

● கணினி வடிவமைப்பு: **டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், `முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

தொலைபேசி : 044 4211 9497
044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

கல்விக்கு உதவும் குழு சேமிப்பு

அன்புள்ள வாசகர்களுக்கு,

கோடை விடுமுறை முடிந்து பிள்ளைகள் அனைவரும் கல்வி நிறுவனங்களை நோக்கி செல்ல ஆரம்பித்திருப்பார்கள். தரமான கல்வியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு கல்வி துறையில் பல புரட்சிகரமான திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவது பாராட்டுதலுக்குரியது.

கல்வி கற்பதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கான கட்டமைப்பு வசதிகள், பாடத் திட்டங்களில் தரமான கல்விக்கான மாற்றங்கள், மாணவர்களுக்கு சிறப்பான சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்குவது போன்ற நடவடிக்கைகளை தமிழக அரசு விரைவாக மேற்கொண்டு வருவதால் கல்வியில் தமிழகம் மென்மேலும் வளர்ச்சியடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் பொருளாதார நிலையை ஆய்வு செய்வதற்காக ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் நிதி நிலை ஆய்வில் கிடைத்த தகவலின் அடிப்படையில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் குழுக்களிடமிருந்து பெற்ற சிறு கடன்களில் எழுபது சதவீதத்திற்கு மேல் அவர்கள் பிள்ளைகளின் கல்விக்காகவே பெற்றிருப்பதாக தெரிய வந்துள்ளது. இதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் தங்கள் குழுக்கள் மூலமாக அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் சேமிப்பும் அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு பெரிதும் கை கொடுத்து உதவுகிறது.

எனவே, நம்முடைய குழுக்களில் உள்ளவர்களும் சீரான முறையில் சேமிப்பது அவசியமான ஒன்றாகும். எனவே, அனைத்து சுய உதவிக் குழுக்களும் முறையாகக் கூட்டங்கள் நடத்தி, தொடர் சேமிப்பு செய்து, தங்கள் குழுக்களின் மூலம் சுய தொழில் தொடங்க பணிகள் மேற்கொண்டு, வங்கிகள் மூலம் நேரடியாகக் கடன் பெற்று, அதன் மூலம் தங்களின் பொருளாதாரத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்தப் பாடுபட வேண்டும். இதனால் குழுக்களின் செயல்பாடுகள் மேலும் வலிமை பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குழுவாக செயல்படுங்கள். ஒற்றுமையே வெற்றிக்கு வழி...

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
சிறப்புமிகு செயல்பாடுகள்

-ஓர் பார்வை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு ஆகியவற்றின் மூலம் பெண்கள் சமூக பொருளாதார ஆற்றல் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கோடு 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரித்து சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 2012-13ஆம் ஆண்டிலிருந்து மாநிலம் முழுவதும் 31 மாவட்டங்களில் 265 வட்டாரங்களில் 8232 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து, அவர்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கான நிலைத்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி, இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம், அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் முழுப் பொறுப்பு

ஏற்பதோடு, கிராம சபைக்கு விளக்கம் அளிக்கக் கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திடவும், நிலைத்தத் தன்மையினை அடையச் செய்திடவும், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களையும் ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்படுகின்றன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற் படுத்தும் பொதுவான மையமாக அமைந்துள்ளன.

நிதி உள்ளாக்கம்

முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி / ஆதார நிதி ஆகியவை வழங்கப்படுகிறது. இதன் மூலம் குழுக்கள் தங்களின் மொத்த நிதியை அதிகரித்துக் கொள்ளவும் மற்றும் நிதி மேலாண்மைத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் ஒழுக்கத்தினையும் உருவாக்குகிறது. சுழல் நிதியை சரியான முறையில் பயன் படுத்துவதின் மூலம் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெறும் நம்பகத்தன்மையை அடைகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கைத் துவக்குவதின் மூலம் வங்கியுடனாக இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. வங்கிகளில் பெறப்படும் கடன்கள் மூலம் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான ஊக்கத் தொகை

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தவும், அவற்றின் வழிகாட்டுதலின்படி இயங்கும் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார செயல்பாடுகளை ஊராட்சி அளவில் மேம்படுத்தவும் தமிழக அரசு ரூபாய் 1 இலட்சம் வீதம் ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று அதனை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கும் கடன்களாக வழங்குகின்றன. வங்கிகளிடமிருந்து சுய உதவிக் குழுக்கள் பெற்று வரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பெறும் கடன்கள் கூடுதல் நிதி ஆதாரமாகப் பயன்படுகிறது. பல ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 1 கோடி ரூபாய் மற்றும் அதற்கும் அதிகமாகக் கடன்கள் பெற்று குறித்த நேரத்தில் திரும்பச் செலுத்தி வருகின்றன.

வங்கி முகவர்கள்

வங்கிகள் இல்லாத இடங்களில் வங்கிச் சேவைகளை கொண்டு செல்ல, வங்கி முகவர்களை வங்கிகள் நியமிக்கின்றன. சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் வங்கி முகவர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பல்வேறு வங்கிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சமுதாய வங்கி ஒருங்கிணைப் பாளராக களப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சேவை செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சமூக வங்கி ஒருங்கிணைப் பாளர்கள் வங்கிக் கடன் இணைப்பை கண்காணித்தல், கடன் வசூல், பொருளாதார கல்வி மற்றும் ஆயுள் காப்பீடு போன்ற நான்கு விதமான பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முக்கிய பணியாக சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் கடன் தேவைகளுக்கு உதவி செய்வர். இவர்கள் வங்கிக்கும் மற்றும் சமுதாய மக்களுக்கும் இணைப்புப் பாலமாக செயல்பட்டு அனைத்து வங்கி சேவைகளையும் வழங்குவர்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா

திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்றது. 'தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா' திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய

தொழிற்பயிற்சி ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரம், தகவல் தொழில் நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம் போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகுகளால் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாம்கள் நடைபெறும் பொழுது தேவையான விவரங்களை வேலை தேடி வருபவர்களுக்கு வழங்கி அவர்களது கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சரியான வேலையினை தேர்வு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான (WHH) சிறப்பு வாழ்வாதார திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் மகளிருக்கு பயிற்சி வழங்க தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளை சார்ந்த மகளிர் பிற திட்ட இணைப்புகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பு

மாதவிடாய் காலங்களில் பெண்களின் சுகாதாரத்தினைக் கருத்தில் கொண்டு, வளர் இளம் பெண்கள், மகப்பேறுற்ற தாய்மார்கள் மற்றும் பெண் சிறைக் கைதிகளுக்கு சானிடரி நாப்கின்களை இலவசமாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

அரசால் இலவசமாக வழங்கப்படும் சானிடரி நாப்கின்களை தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, நாப்கின்கள் தயாரித்தல் மற்றும் விநியோகம் செய்ய அவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் சானிடரி நாப்கின்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள சானிடரி நாப்கின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 54 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இக்கூட்டமைப்பு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் மாதவிடாய் சுகாதாரத் திட்டத்திற்கு தேவைப்படும் பெல்ட் வகை சானிடரி நாப்கின்களை விற்பனை செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகளின் மறுசுழற்சி

சுற்றுச் சூழல் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட ஊக்கப்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பு முயற்சியாக பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த மையங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, துகள்களாக்கப்பட்டு, அந்த பிளாஸ்டிக் துகள்கள் தார்ச்சாலைகள் போட பயன்படுத்தப்படுகின்றன.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM) - தீன் தயாள் அந்தியோதய யோஜனா

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை அடிமட்ட நிலையிலிருந்து லாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்கிறது.

நகர்ப்புற உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை படிப்படியாக உயர்த்தித் தருவது, மேலும் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் நிதி ஆதாரங்களின் மூலம் கடன், சமூக பாதுகாப்பு மற்றும் திறன் வளர்ப்பின் மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுவது போன்றவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மதி அங்காடி (Mathi KIOSK)

மதி அங்காடிகள் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில்

மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திடும் வகையில் மாநில, மாவட்ட, வட்டார அளவில் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இந்த கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களுக்கு மேம்பட்ட சந்தைக்கும் சுய உதவிக் குழு உறுப்பினர் களின் வணிகத் திறனுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

ஆண்டுதோறும் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது. இக்கண்காட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

சாராஸ்

சாராஸ் (SARAS) என்பது அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த ஊரக கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். வருடந்தோறும் பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது. சாராஸ் கண்காட்சிகளில் தமிழ் நாட்டைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து பயன் அடைந்து வருகின்றனர்.

கல்லூரிச் சந்தைகள்

மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு கல்லூரிச் சந்தைகள் மிக முக்கியமான சந்தை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளது. கல்லூரிச் சந்தைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கு கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து பயன் அடைகின்றனர்.

ஒத்தத் தொழில் குழுக்கள்

வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத ஒத்தத் தொழில் புரியும் ஒரே பகுதியைச் சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்தத் தொழில் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப்பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும், உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் குறித்த பயிற்சிகள் வழங்கவும் தொகுப்பு நிதி

வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது.

பண்ணைத் தொழில் (Farm Activity)

முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் மகளிரை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பயிர் மற்றும் பிற தொழில்களுக்கு ஏற்றவாறு திறன் பயிற்சி மற்றும் நவீன தொழில் நுட்ப பயிற்சி, விவசாயத்துறை மற்றும் பிற துறை மூலம் இணைந்து உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

விவசாய உற்பத்தியாளர் குழுக்களைப் போலவே பண்ணை சார்ந்த ஆடு மற்றும் மாடு வளர்ப்பு உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிற்கும், தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், இடு பொருட்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும், கூடுதலாக கிராம ஊராட்சிகளில் பண்ணை சார்ந்த தொழில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டு ஒரு ஊராட்சிக்கு ஒரு விவசாய உற்பத்தியாளர் குழு என்ற அடிப்படையில், விவசாய உற்பத்தியாளர்களின் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்

மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக ‘பெண் விவசா யிகள் மேம்பாட்டு திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மகளிரின் பங்கேற்பினை விவசாயத் தொழிலில் அதிகப்படுத்துவதும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 வட்டாரங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப் படுகிறது. இதன் தொடர்ச்சியாக, மூன்று வருடங்களில் 12,000 பெண் விவசாயிகள் பயனடையும் விதமாக கரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 4 வட்டாரங்களில் 2வது கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

உழைக்கும் மகளிரின் அன்றாட செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் அவர்கள் தங்களின் தொழிலை மேற்கொள்வதற்கும், பணியிடங்கள், வங்கிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளில் பணிகளை மேற்கொள்வதற்கும் எளிதில் சென்று வர ஏதுவாக இரு சக்கர வாகனங்களை மானியத்துடன் வாங்குவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தன்னுடைய ஊதியமே குடும்பத்தின் பிரதான வருமானம் என்ற நிலையில் வாழ்வாதார செயல்பாட்டிற்காக / வேலை வாய்ப்புக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொலை தூரத்திற்குச் சென்று பணிபுரியும் பெண்களே திட்டத்தின் நோக்கத்திற்கான பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் கியர் இல்லாத / ஆட்டோ கியரில் இயங்கும் வசதியுடன் கூடிய 125ccக்கு மிகாமல் தரமான புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொள்ள அதிகபட்ச மானியமாக வாகன விலையில் 50 சதவீதமோ அல்லது ரூ.25,000/ இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவிக் குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்பது நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் செயலாகும்.

ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர்கள் பூச்சரம்

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஊத்துக்காடு ஊராட்சியில் முதன்மை தொழிலாக உள்ள கீரை சாகுபடி முற்றிலும் பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பகுதியில் செயல்படும் ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர்கள் பூச்சரத்தின் உறுப்பினர்கள் இது குறித்து கூறும்போது, "ஊத்துக்காடு என்றாலே அரைக் கீரை, சிறு கீரை, முளைக்கீரை மற்றும் பொன்னாங்கன்னி கீரை போன்ற சத்துள்ள கீரைகளும், மருத்துவ குணம் கொண்ட கீரையும் பிரதான உற்பத்தி ஆகும் இடம் என்றும், ஊத்துக்காடு கீரை என்றாலே தரமானது, சுவையானது என்றும் பெயர் பெற்று விளங்கி வருகின்றது.

நிலம் உள்ளவர்கள் மட்டுமே கீரை தோட்டத்தின் உரிமை யாளர்களாக இருந்து வந்தனர். இங்கு சாகுபடி செய்யப்படும் கீரைகளை வியாபாரிகள் எங்களிடமிருந்து வாங்கி அருகில் உள்ள கிராமங்கள் மற்றும் வாலாஜாபாத், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள ஊர்களில் வியாபாரம் செய்து வந்தனர்.

அரைக் கீரை, சிறு கீரை, முளைக்கீரை மற்றும் பொன்னாங்கன்னி கீரை போன்ற சத்துள்ள கீரைகளும், மருத்துவ குணம் கொண்ட கீரையும் பிரதான உற்பத்தி ஆகும் ஊத்துக்காடு கீரை என்றாலே தரமானது, சுவையானது என்று பெயர் பெற்று விளங்கி வருகின்றது.

"ஊரை சுற்றி நிலம் வீட்டை சுற்றி கீரை தோட்டம்" என்ற பெயர் எங்கள் கிராமத்தின் அடையாளமான புகழ் பெற்ற எல்லையம்மன் ஆலயத்தினை போல நிரந்தரமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் எங்கள் பகுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் நடத்தப்பட்ட மக்கள் நிலை ஆய்வில் கண்டறியப்பட்ட ஏழை. மிகவும் ஏழை, கீரை தோட்டங்களில் கூலி வேலை செய்து வந்தவர்கள் மற்றும் தினந்தோறும் சிறிய அளவில் கீரை விற்பனை செய்து வந்தவர்களை ஒன்றாக சேர்த்து 'ஊத்துக்காடு கீரை உற்பத்தி யாளர்கள் பூச்சரம்' என்ற பெயரில் ஒத்த தொழில் குழுவினைத் தொடங்கினோம். பின்னர் பூச்சரம் சார்பில் நான்கு ஏக்கர் தொன்னூறு சென்ட் அளவுள்ள நிலத்தினை குத்தகைக்கு எடுத்து கீரை உற்பத்தியில் ஈடுபட்டோம்.

தர மதிப்பீடு செய்யப்பட்டபின் எங்கள் ஒத்த தொழில் குழுவிற்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இத்தொகை யிலிருந்து மருந்து தெளிப்பான், தோட்ட தொழில் உபகரணங்கள் போன்றவற்றை கொள்முதல் செய்து, கீரை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

'ஊரை சுற்றி நிலம் வீட்டை சுற்றி கீரை தோட்டம்' என்ற பெயர் எங்கள் கிராமத்தின் அடையாளமான புகழ் பெற்ற எல்லையம்மன் ஆலயத்தினை போல நிரந்தரமாக அமைந்துள்ளது.

தோட்டத்தில் கூலி ஆட்களாக வேலை செய்து வந்த நாங்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி ஒத்த தொழில் குழு அமைத்து நில உரிமையாளர்களாகவும், உற்பத்தியாளர்களாகவும் மாறி, நாங்கள் உற்பத்தி செய்திடும் கீரைகளை நாங்களே அருகில் உள்ள காஞ்சிபுரம் சுற்றியுள்ள சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து, நாள் ஒன்றிற்கு 250/ ரூபாய்க்கும் குறையாமல் வருமானம் ஈட்டி வருகிறோம்.

நிலச்சுவான்தாரர்களிடமிருந்து கீரைகள் வாங்கும் போது ஆயிரம் கட்டுகளுக்கு குறைவாகவே கீரைகள் வாங்க முடிந்தது. தற்போது தினந்தோறும் 2500 கட்டுகளுக்கும் மேலாக கீரைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறோம்.

'ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர்கள் பூச்சரம்' என்ற ஒத்த தொழில் குழு அமைப்பதற்கு முன்னர் தினந்தோறும் ரூ.100/ வரை வருமானம் ஈட்டி வந்த நாங்கள், தற்போது தினந்தோறும் ரூ.250/ முதல் ரூ.300/ வரை வருமானம் ஈட்டி வருகிறோம்.

வாழ்வளிக்கும் வளமான கீரை சாகுபடி தொழிலுக்கு நிதி அளித்து எங்கள் வாழ்க்கையை செழிப்பாக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர்கள் பூச்சரத்தின் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

கருமந்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின்

வெற்றிக் கதைகள்

சேலம் மாவட்டம் பெத்த நாயக்கன்பாளையம் ஒன்றியத் திற்கு உட்பட்ட கருமந்துறை பகுதியில் மலைவாழ் மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் மேல்நாடு, கீழ்நாடு, வடக்கு நாடு, கிழக்கு நாடு என்ற நான்கு ஊராட்சிகள் உள்ளன. இங்கு மகளிர் திட்டத்தின் கீழ் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நான்கு ஊராட்சிகளிலும் செயல்பட்டு வருகிறது. இப்பகுதி மக்கள் விவ சாயமும் அதை சார்ந்த தொழில்களில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றனர். தங்களது உற்பத்தி பொருட்களை 35 கி.மீ தொலைவில் உள்ள வாழப் பாடிக்கும் 75 கி.மீ தொலைவில் உள்ள தலைவாசலுக்கும் கொண்டு செல்லும் நிலையில் உள்ளனர்.

கருமந்துறையில் வசிக்கும் மலைவாழ் மக்களின் சமூக பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் 'விடியல்' என்னும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு அங்கமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தங்களது விளைப் பொருட்களை வாடகை வண்டி மூலம் ஏற்றிச் செல்ல அதிகப்படியான தொகையினை கொடுக்க வேண்டி உள்ளதால் தங்களது வருமானத்தில் பெருமளவில் போக்கு வரத்துக்காக செலவிட வேண்டிய நிலை உள்ளது. இதனால் போதுமான லாபம் ஈட்டும் நிலை இல்லாமல் இருந்து வந்தது.

இதற்காக மகளிர் திட்டம் மாவட்ட மகமை மூலம் மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரண்டு 'பிக்கப்' சரக்கு வாகனத்தை மேல்நாடு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கும், கீழ்நாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு வழங்கப்பட்டது. இந்த திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சரின் திருக்கரங்களால் 01.09.2018 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

இவ்விரு கூட்டமைப்புகளும் தலா ஒரு ஓட்டுநரை நியமித்து நிர்வகித்து வருகின்றனர். தற்போது இவ்வண்டிகளில் மலை பகுதியில் விளையும் விளைப்பொருட்களை மகளிர் சுய உதவிக்குழு பொருட்கள் மட்டுமல்லாமல் ஏழை விவசாயிகளும் குறைந்த வாடகை கொடுத்து தங்களது விலை பொருட்களை தலைவாசல், ஆத்தூர், வாழப்பாடி, சேலம் போன்ற சந்தைகளில் கொண்டு சென்று விற்று அதிகப்படியான லாபத்தினை ஈட்டி வருகின்றனர்.

இதனால் மலைவாழ் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் மேலோங்கி உள்ளது. இதுவரை இக்கூட்ட மைப்புகள் மூன்று மாதத்தில் ரூ.47,980/ லாபம் ஈட்டியுள்ளனர். இதனை நிர்வகிக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப் புகளுக்கும் வருமானம் பெருகி உள்ளது. இத்திட்டத்தினால் இப் பகுதி மகளிர் குழுக்களின் செயல்பாடுகளில் உத்வேகம் ஏற்பட்டுள்ளதுடன் பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பையும் பெற்றுள்ளது.

01.09.2018 அன்று கருமந்துறையில் நடைபெற்ற அரசு விழாவில் மகளிர் திட்ட சரக்கு வாகனம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரோஹிணி ரா. பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி தலைவர் திரு. இளங்கோவன் அவர்கள் மற்றும் மகளிர் திட்ட அலுவலர் திரு. சா.செல்வகுமார் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நியூடெக் டெய்லரிங் ஒத்த தொழில் குழுவின் வெற்றிக் கதை

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், இலந்தைக்கூடம் ஊராட்சியில் 30 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு நியூடெக் டெய்லரிங் ஒத்த தொழில் குழு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஒத்த தொழில் குழுவிற்கு தர மதிப்பீடு அடிப்படையில் ஒரு லட்சம் ரூபாய் ஊக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இலந்தைக்கூடம் ஒத்த தொழிற்குழுவில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் ரூ. 5,99,000/- கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக தையல் இயந்திரம் வாங்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூ. 2,30,000/- கடனுதவி வழங்கப்பட்டு 25 தையல் இயந்திரங்களை வாங்கி அதன் மூலம் தையல் தொழில் செய்து வருகின்றனர். கரூர் மாவட்டத்தில் செயல்படும் துணி ஏற்றுமதி நிறுவனங்களிடமிருந்து துணிப்பைகள், தலையணை உறை, ஏப்ரான், துண்டுகள், சமையலறை துண்டுகள் போன்றவை தயாரித்துத் தருவதற்கான பணி ஆணை பெற்று துணிகள் தைத்து ஏற்றுமதி தரத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் அரியலூர் மாவட்ட காவல் துறை, சென்னை ராஜ்பவன் மாளிகை போன்ற இடங்களில் இருந்து துணிப்பைகள் தயாரிக்க உத்தரவுகள் பெற்று தயாரித்து வழங்கப்படுகிறது.

துணிப்பைகள் தைக்கத் தேவையான மூலப்பொருட்கள் கொள்முதல் செய்ய ICICI வங்கி மூலம் ரூ. 2,00,000/- கடனுதவி மற்றும் Ramco நிறுவனத்திலிருந்து பெரு நிறுவன சமூக பொறுப்புப் பணிகள் (CSR) மூலமாக Overlock இயந்திரம் போன்றவை அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவின் போது இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

மலர் தேனீ வளர்ப்பு கூட்டமைப்பு

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஒன்றியம், ஆத்திகாட்டுவிளை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன், தேனீ வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள 20 நபர்களை இணைத்து, 'மலர் தேனீ வளர்ப்பு கூட்டமைப்பு' உருவாக்கப் பட்டுள்ளது. வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூ.10,000/- நிதியுதவி மற்றும் இக்கூட்டமைப்பு உறுப்பினர்களின் பங்குத் தொகை சேர்த்து ரூ.2,00,000/-த்திற்கு 100 தேனீ பெட்டிகளை வாங்கி தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மூன்று மாதங்கள் ரப்பர் எஸ்டேட் பகுதியிலும், மற்ற காலங்களில் தங்கள் கிராமத்திலும் தேனீ பெட்டியை வைத்து தேன் சேகரிக்கின்றனர்.

தேன் கூட்டில் இருந்து தேன் எடுப்பதற்கு ரூ.7,000/- செலவில் இயந்திரம் ஒன்று வாங்கப் பட்டுள்ளது. ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் ஒரு பெட்டிக்கு சராசரியாக 7 கிலோ வரை தேன் கிடைக் கிறது. மற்ற காலங்களில் 34 கிலோ வரை தேன் கிடைக்கும். ஒரு தேன் பெட்டியில் மாதம் ஒன்றிற்கு சராசரியாக 3 கிலோ வரை தேன் கிடைக்கும். 100 தேன் பெட்டிகளில் மாதம் ஒன்றிற்கு சுமார் 200 கிலோ தேன் கிடைக்கிறது.

ஒரு கிலோ தேன் ரூ. 300/-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் மாதம் ரூ. 60,000/- வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஒத்த தொழில் குழு உறுப்பினர்கள் சராசரியாக மாதம் ஒன்றிற்கு ரூ. 3,000/- வரை கூடுதல் வருமானம் பெருகின்றனர். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கும், குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கும் இத்தொகை பயனுள்ளதாக இருக்கிறது என்று மலர் தேனீ வளர்ப்பு கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.



சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின்
வெற்றிக்கதை

என் பெயர் உத்தமி. நான் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மறவன்மடம் ஊராட்சியில் சக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் 23.02.2002 அன்று உறுப்பினராக சேர்ந்தேன். எங்கள் குழு மூலம் பல்வேறு தொழில் திறன் பயிற்சிகளை பெற்றுள்ளேன். மேலும் மகளிர் திட்ட அலுவலகம் மூலம் எங்கள் சுய உதவிக் குழு சுழல் நிதியாக ரூ. 25,000 வங்கி கடன் பெற்று அதன் மூலம் கறவை மாடு வாங்கி பால் வியாபாரம் செய்ய ஆரம்பித்தேன்.

பின்னர் மூலிகை கூந்தல் தைலம் தயாரிப்பதற்கான பயிற்சி பெற்று ஹேர் ஆயில் தயாரிக்கும் தொழிலை நானும் எங்கள் குழு உறுப்பினர்களும் சேர்ந்து சிறப்பாக செய்து, மாதம் ரூ. 10,000/ வரை வருமானம் ஈட்டி வருகிறோம். மேலும் எங்கள் சுய உதவிக் குழு மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் நடை பெறும் அனைத்து கண்காட்சிகள், கல்லூரி சந்தைகள் போன்றவற்றில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருகிறோம்.

எங்கள் குழு 2011-12ம் ஆண்டிற்கான மணிமேகலை விருதும், 2012-13ம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த மகளிர் சுய உதவிக் குழுவிற்கான விருதும் பெற்றுள்ளது. மேலும் ஹேர் ஆயிலை தரமான முறையில் தயாரித்து உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற்பனைக்காக அனுப்புகிறோம். நாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய மகளிர் திட்ட அலுவலகம் உதவி வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலால் எங்களின் வாழ்வாதாரம் மிகவும் உயர்ந்துள்ளது.

"சுகாதாரத்தைப்
பேணிடுவோம்...
சுற்றுச் சுழலை
பாதுகாத்திடுவோம்...!"

வாழ்க்கைக்கு வழிகாட்டிய
வாழ்வாதார இயக்கம்

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டாரம், மணியம்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் திருமதி. மயில்தாய். ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து கூறும்போது, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான் எவ்வித தொழி லும் செய்ய முடியாத கஷ்டமான சூழ்நிலை யில வாழ்ந்து வந்தேன். எங்கள் பகுதியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்ட மைப்பில் உறுப்பினராக சேர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல் பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதன் வாயிலாக ஒற்றுமை, சகிப்புத் தன்மை, விடாமுயற்சி, சேமிப்பு பழக்கம், அரசு நலத்திட்ட உதவிகள் குறித்த விழிப்புணர்வு, முடிவெடுக்கும் திறன் போன்ற தலைமை பண்புகளை வளர்த்துக் கொள்ள முடிந்தது.

நலிவுற்றோர்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் நோக்கத்தோடு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படும் தனிநபர் கடன் உதவி திட்டத்தின் கீழ் ரூ.25,000 பெற்று சீமைப்புல் விவசாயம் செய்து வருகிறேன். சீமைப்புல் விவசாயம் செய்து வருவதன் மூலம் தினசரி வருமானம் குறைந்தபட்சம் ரூ. 100 முதல் ரூ. 120 வரை ஈட்ட முடிகிறது.

இத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தை பயன் படுத்தி குழந்தைகள் கல்வி மற்றும் குடும்பத்தின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதோடு, மகிழ்ச்சியான வாழ்க்கையினை நடத்தி வருகிறேன். திக்கு தெரியாத நிலையில் தவித்துக் கொண்டு இருந்த எனக்கு தனி நபர் கடன் உதவி வழங்கி வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக் கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளப் பேரிடர் கால நிவாரணப் பணிகளில் சுய உதவிக் குழு மகளிரின் செயல்பாடுகள்

புயல், மழை, வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரிடர்களால் மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இயற்கை பேரிடர் ஏற்படும் சமயங்களில் உதவிக் குழு மகளிரும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இயற்கை பேரிடர் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் கடலூர் மாவட்ட சுய உதவிக் குழு மகளிரின் வெற்றிக் கதையை சற்று கேட்போமா...

2015 அக்டோபர் 8ஆம் நாள் கடலூர் மாவட்டம், நெய்வேலியில் ஒரே நாளில் கொட்டிய மழையினால் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தால் 6 கிராமங்களில் பேரிழப்பு ஏற்பட்டது. இம்மாவட்டத்தில் பேரிடர் நிவாரணப் பணிகளைக் கண்காணித்து வந்த கடலூர் மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலரும், முன்னாள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளருமான திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், வெள்ளத்தால் சேதமடைந்த உரிமப் பத்திரங்கள் மற்றும் சான்றுகள் குறித்து கணக்கெடுத்து வழங்கும் பணியினை நமது மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் வசம் ஒப்படைத்தார்.

பெரியக்காட்டுப்பாளையம், கருக்கை, விசூர், கல்குணம், பூதாம்பாடி மற்றும் கத்தாழை ஆகிய கிராமங்களில் 120 பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மூன்றே நாட்களில் கணக்கெடுப்பை முடித்து, இழப்புகள் விவரம், இழப்பை சந்தித்த நபர்கள் விவரம் ஆகியவற்றை அளித்தனர். தொடர்ந்து ஓரிரு தினங்களில் சுய உதவிக் குழு மகளிரின் சீரியப் பணியால் பொதுமக்களுக்குத் தேவையான 3410 ஆவணங்கள் 9 துறைகளிலிருந்து வழங்கப்பட்டன.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டை பாராட்டிய கண்காணிப்பு அலுவலர் அவர்கள், சிதம்பரம் நகராட்சி பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணியை நமது மகளிரிடம் ஒப்படைத்தனர். அந்தப் பணியை மிகச்சிறப்பாக நமது மகளிர் சுய உதவிக் குழுவினர் செய்து முடித்தனர்.

தொடர்ந்து பண்ருட்டி அருகாமையில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரியில் ஒரு நிவாரண வழிகாட்டி முகாமை உருவாக்கி அப்பகுதிக்கு வெளி மாவட்டம்

மகளிரின் நிலைத்த வாழ்வாதாரத் தொழிலுக்கு உதவிக் கரங்கள்

உணவு, உடை, வீட்டுக்குத் தேவையான பொருட்கள் என பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வந்தாலும், நிலையான வாழ்விற்கு உதவ 'உலக சமுதாய சேவா சங்கம்' முன் வந்தது. இவர்கள் உள்ளன்போடு கூடிய நிதி உதவியால், பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சிப் பகுதியில் வருவாய்துறையின் அனுமதியுடன் 25 செண்ட் நிலம் பெற்று, உலக சமுதாய சேவா சங்கத்தின் நிதியாக ரூ. 10.75 இலட்சமும், பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் ரூ. 1.50 இலட்சமும் பெற்று ஒரு 'சிமெண்ட் ஹலோ பிளாக் உற்பத்தி மையம்“” அமைக்கப்பட்டு தற்போது சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த உற்பத்தி மையத்தை மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் இயக்கி வருகின்றனர். சுகாதாரத் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிவறைகளுக்குத் தேவையான கட்டுமானப் பொருட்களை உரிய காலத்திற்குள் அனுப்பி தங்களின் தொழிலை மேம்படுத்திக் கொள்வதுடன், தங்களின் நிலைத்த வாழ்வாதாரத்தையும் நமது சுய உதவிக் குழு மகளிர் பெருக்கி வருகின்றனர்.

மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வரும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு முன்னுரிமைப்படுத்தி உரிய காவல்துறை பாதுகாப்புடன் சேர்க்கும் பணியை செய்து முடிக்கும் பெரும் பொறுப்பு நமது மகளிர் சுய உதவிக் குழுக்களின் பகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. அப்பணியினை எங்கள் மகளிர் சுய உதவிக் குழுவினர் திறம்பட செய்து முடித்தனர்.

பேரிடர் நிவாரணப் பணிகளை சுய உதவிக் குழு மகளிர் திறம்படச் செய்திட காரணமாக இருந்து, தொடர்ந்து ஊக்கம் அளித்து வந்த கடலூர் மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா அவர்கள் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளர் அவர்களும் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பாராட்டி சான்றுகள் வழங்கி கௌரவித்தனர்.

வெள்ளப் பேரிடர் நிகழும் காலங்களில் மீட்பு பணியில் மகளிர் குழுவை ஈடுபடுத்தும் பொருட்டு கடலூர் மாவட்டத்தில் 60 மகளிருக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி, இந்திய ரெட் கிராஸ் சொசைட்டி வாயிலாக அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மகளிருக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெ. அன்புச்செல்வன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணைச்செயலர் திருமதி. நீதா கெஜ்ரிவால் அவர்களால் வழங்கப்பட்டது.

கடலூரிலிருந்து நாகை நோக்கி பயணம்

கடலூர் மாவட்டத்தில் நமது சுய உதவிக் குழு மகளிர் ஆற்றிய அரும் பெரும் பணிகளை கண்டு கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / வேளாண்மைத் துறை முதன்மை செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், 'கஜா புயல்' பாதிக்கப்பட்ட நாகை மாவட்டத்தில், கடலூர் மாவட்டத்தில் அமைத்ததைப் போல் நிவாரண வழிகாட்டி மையங்களை அமைத்து வெளிப்படைத் தன்மையோடு உரிய காவல் துறை பாதுகாப்புடன் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்க அளித்துள்ள வாய்ப்பை முழுமனதோடு கடலூர் மாவட்ட மகளிர் திட்ட இயக்குர் அவர்கள் வரவேற்று, கடலூர் மாவட்ட குழுவினருடனும், நாகை மாவட்ட பகுதி ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்களுடனும் இணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

நாகை மாவட்டத்தில் நமது மகளிர் சுய உதவிக் குழுவினர் வாயிலாக வெளிப்படைத் தன்மையுடன் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கி வரும் நிவாரணப் பொருளுதவிகளை நெஞ்சம் நெகிழ்ந்து பொதுமக்கள் பெற்றுக் கொண்டதுடன் தங்களின் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

ஸ்ரீ மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினரின்

கான்கிரீட் கலவை இயந்திரம்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டாரம், தளவாய்புரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள், செட்டியார்பட்டி யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ரூ. 27.90 லட்சம் பெருங்கடன் பெற்று பல்வேறு தொழில்கள் தொடங்கி உள்ளனர். இதில் முக்கியமாக தளவாய்புரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் செயல்படும் ஸ்ரீ மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினர் கான்கிரீட் கலவை இயந்திரம் கொள்முதல் செய்துள்ளனர். இந்த இயந்திரத்தை விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இரா. தெய்வேந்திரன் அவர்கள் இயக்கி வைத்தார்கள். இந்த நிகழ்வின் போது உதவி திட்ட அலுவலர்கள் திரு. பால்ராஜ், திரு. முருகன் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

வாழ்வாதாரத் திட்டம் தந்த வளர்ச்சி

தஞ்சாவூர் மாவட்டம், கொல்லாங்கரை ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஆவாரம் பூ மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள செல்வி, அமுதா, மற்றும் சித்ரா தேவி ஆகியோர் குழுவில் சேரும் போது முறுக்கு தயாரிக்கும் நிறுவனத் திற்கு வேலைக்குச் சென்று குறைவான கூலி பெற்று வந்தனர். இதில் இவர்களுக்குப் போதுமான வருமானம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்த மூன்று பேரும் இணைந்து சொந்தமாக

முறுக்குத் தயாரிக்கும் தொழில் தொடங்க ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் கடன் கோரி இருந்தனர். இவர்களின் கடன் மனுக்களை ஆய்வு செய்து ஒரு நபருக்கு ரூ. 25,000/ வீதம் மூன்று நபர்களுக்கும் ரூ. 75,000/ கடனாக வழங்கப்பட்டது.பெற்ற கடன் தொகையினை வைத்து செல்வி என்ற உறுப்பினர் வீட்டில் முறுக்கு, பொரி உருண்டை மற்றும் வத்தல் போன்றவற்றை உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். உற்பத்தி செய்த பொருட்களை அவர்களின் கணவர்கள் மூலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கடைகளில் வியாபாரம் செய்தனர். இதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு உறுப்பினருக்கு ரூ. 600/க்கும் மேல் வருமானம் கிடைக்கிறது. பெறும் வருமானத்தின் மூலம் கடனை முழுவதுமாக அடைத் துள்ளனர். மேலும் பிள்ளைகளையும் நல்ல முறையில் படிக்க வைக்கின்றனர். தங்களது வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளதற்குக் காரணமான மகளிர் திட்டத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர் ஆவாரம் பூ மகளிர் குழுவினர்.

வாழ்வாதாரத் திட்டத்தினால் கிடைத்த வளம்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர், குயவர் தெருவில் வசித்து வருபவர் எஸ். குண சேகரன் (வயது 38), இவர் தான் வசிக்கும் பகுதியில் சௌமியா என்ற பெயரில் சிறிய தையல் கடை ஒன்றை வைத்து துணிகள் தைத்துக் கொடுத்து குறைந்த அளவில் வருவாய் பெற்று வந்தார். இந்நிலையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் முத்ரா லோன் குறித்த விபரங்களை அறிந்து, நாகூரில் செயல்படும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் முத்ரா லோன் ரூ. 50,000/ வேண்டி விண்ணப்பித்து கடன் பெற்றார். அந்தத் தொகையைக் கொண்டு, நவீன இயந்திரங்களை வாங்கி தனது தையல் கடை யினை விரிவுபடுத்திய குணசேகரன், தற்போது அதிக அளவிலான துணிகளை தைத்துக் கொடுத்து அதிக அளவில் வருவாய் பெறுவதுடன், மாதந் தோறும் ரூ. 5,000/ வரை சேமிப்பதாகவும் கூறு கிறார். தனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் குணசேகரன்.

மளிகைக் கடையால் கிடைத்த வாழ்வு

எனது பெயர் ராணி, நான் தஞ்சாவூர் மாவட்டம், கண்டிதம்பட்டு ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் கணேசன். அவர் இறந்து 25 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு 2 பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் நான் வயல் வேலை செய்து எனது பிள்ளைகளைப் படிக்க வைத்தேன். எங்கள் பகுதியில் செயல்படும் தாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்ந்து, அதன் மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் ரூ. 10,000/ கடன் வாங்கினேன். அந்தப் பணத்தைக் கொண்டு சிறிய அளவில் பெட்டிக் கடை வைத்து, தினமும் ரூ. 300/ வரை வருமானம் ஈட்டுகிறேன். எனது பெட்டிக் கடையில் சிறப்பாக வியாபாரம் ஆனது. பின்னர் சிறிய அளவில் மளிகை கடை ஒன்றினை ஆரம்பித்தேன். அதில் நாள் ஒன்றுக்கு ரூ. 500/ வரை வருமானம் வருகின்றது. தற்போது எனது மளிகை கடை மிகவும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இதன் மூலம் எனது வருமானம் பெருகியுள்ளது. எனக்கு தகுந்த சமயத்தில் உதவி செய்த மகளிர் திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை சூழலில் –இயற்கை மாறா வாழ்வளித்த வாழ்வாதாரத் திட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், நாயக்கன்பாளையம் வட்டாரத்தில் நாயக்கன்பாளையம் ஊராட்சி, பாலமலை பகுதியில் உள்ள மாங்குழி பழங்குடியினர் குடியிருப்பில் இயற்கை கொஞ்சும் சூழலில் வேளாண்மை தொழில் செய்து வாழ்ந்து வந்தனர். அவர்களில் 12 பழங்குடியின மகளிரை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்கீழ் ஸ்ரீ கணபதி மகளிர் சுய உதவிக்குழு அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இக்குழுவில் உள்ள 10 பழங்குடியின மகளிர் உறுப்பினர்களுக்கு கோவை மாவட்டத்தில் உள்ள பெரு நிறுவனமான லஷ்மி மில் (LMW) (சமூக பொறுப்பு கூட்டாண்மை நிதியின் கீழ் CSR) நிறுவனத்தின் நிதியுதவியுடன் அம்பேத்கர் ஊரக சுய வேலை பயிற்சி நிறுவனம் (A-SETI) மற்றும் மகளிர் திட்டம் இணைந்து நடத்திய காளான் வளர்ப்பு, உற்பத்தி மற்றும் விற்பனை பயிற்சி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாயக்கன்பாளையம் கூட்டமைப்பின் மூலம் சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.25,000/ பெற்று காளான் வளர்க்க தேவைப்படும் விதைகள், புல் மற்றும் பைகளை கொள்முதல் செய்து தங்களது இல்லங்களிலேயே மிக எளிமையான இயற்கை முறையில் காளான் உற்பத்தி செய்து வருகின்றனர். மேலும் இக்குழுவினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் பெறப்பட்ட ஆதார நிதி ரூ. 15,000/ மற்றும் வங்கி கடன் ரூ. 1,40,000/ பெற்று ஆடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பும் செய்து வருகின்றனர். மேலும் பருவ நிலைக்கு ஏற்ப கிடைக்கும் இயற்கை பொருட்களான நெல்லிக்காய், கடுக்காய் மற்றும் தேன் போன்றவற்றை சேகரித்து பக்குவப்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறார்கள். இயற்கை சூழலில் ஆடு, மாடு வளர்ப்பு தொழிலுடன் இணைந்து ஒருங்கிணைந்த காளான் வளர்ப்பு உற்பத்தியும் செய்து வருகின்றனர். பயிர் செய்யப்பட்ட காளான்களை மலைப்பகுதியிலிருந்து வாடகை ஜீப் மூலம் பெரியநாயக்கன்பாளையம் கடைகளில் விற்பனை செய்து அதிக வருவாய் பெற்று வளமாக வாழ்ந்து வருகின்றனர்.

கரம் இழந்தவருக்கு கரம் கொடுத்து கண்ணியம் (கணினி) காத்து வாழ்வளித்த வாழ்வாதாரத் திட்டம்

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாரம், மசினகுடி ஊராட்சியைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி மகேந்திரன் என்பவர் கூறும்போது, ``எனக்கு பிறவியிலேயே இரண்டு கைகள் இல்லை. பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ள நான் கணினி பயிற்சி பெற்றுள்ளேன். இரண்டு கரங்கள் இல்லாத நான் பொருளாதார நிலையில் மிகவும் சிரமப்பட்டு, குடும்பத்தினை நடத்தி வந்தேன்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழி காட்டுதலுடன் எங்கள் பகுதியில் உள்ள 7 மாற்றுத் திறனாளி களை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டு 'திறன் வளர்ப்பு சிறப்பு சுய உதவிக் குழு' சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மசினகுடி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அளித்த ஆதார நிதியான ரூ. 15,000/ மற்றும் எனது குடும்பத்தாரின் உதவியுடன் ஒரு கணினி வாங்கி சிறு தொழில் செய்து வருகிறேன். கணினியில் எனது கால்களால் தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு செய்து வருமானம் ஈட்டி வருகிறேன்.

மேலும் செல்லிடைப்பேசி உபரி பாகங்கள், கைபேசியில் மின்பொருள் பதிவேற்றம் செய்தல் போன்ற அனைத்து வேலை மற்றும் சேவைகள் செய்து தனியாக கடை வைத்து வருமானம் ஈட்டி வருகிறேன்

மேலும் நலிவுற்றோர் துயர் துடைப்பு நிதியாக பெற்ற ரூ. 42,000/த்தை குழு உறுப்பினர்களாக உள்ள 7 மாற்றுத் திறனாளிகளும் தலா ரூ. 7000/ வீதம் பெற்று பயனடைந்து வருகிறோம். எனது சமூக பொருளாதார நிலையை உயர்த்தி, எனக்கு இருகரங்களாகவும் ஊன்றுகோலாகவும் சமூகத்தில் நிலை பெற வைத்துள்ள வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகள்" என்று குறிப்பிட்டார்.

நாங்களும் சாதனையாளர்களே!

சாதித்துக் காட்டிய திருநங்கையர்

சமுதாயத்தின் பார்வையில் மூன்றாம் மனிதர்களாக கருதப்படும் திருநங்கையரை, பிறரிடம் கையேந்துவதையே தொழிலாகக் கொண்டவர்களை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தனது செயல்பாட்டினால், கைத்தொழில் கற்றுக் கொண்டு சுயமாக வாழ வழி வகை செய்துள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க களப் பணியாளர்கள் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், புத்தூர் ஊராட்சியைச் சார்ந்த திருநங்கையர்களை ஒன்றிணைத்து, ஸ்ரீ பேத்ரஜ் மாதா திருநங்கையர் சுய உதவிக் குழுவினை 17.02.2017 அன்று ஆரம்பித்தனர்.

தங்களின் வாழ்க்கைக்கு பிறரிடம் கையேந்தி அலைந்து திரிந்த திருநங்கையர்களை ஒருங் கிணைத்து, மகளிர் சுய உதவிக் குழு என்னும் அமைப்பின் கீழ் கொண்டு வந்து, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம். சமுதாயத்தில் அடையாளம் தெரியாமல் புறக்கணிக்கப்பட்ட இவர்களுக்கு அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்து உதவி புரிந்தது.மேலும் இவர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரம் கிடைக்கும் வகையில், அவர்கள் விரும்பிய தொழில்களான தையல், அழகுக் கலை பேன்ற பயிற்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வழங்கப் பட்டது. பயிற்சிகள் நிறைவடைந்தவுடன் தொழில் செய்வதற்காக ஆதார நிதியாக ரூ. 15,000/ மற்றும் கடன் உதவியாக ரூ. 60,000/ புத்தூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் வாயிலாக வாங்கப்பட்டது. மேலும் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி ரூ. 1,20,000/ கடனாக வழங்கியது. தற்போது புத்தூர் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள ஸ்ரீ பேத்ரஜ் மாதா திருநங்கையர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தையல், அழகுக் கலை மற்றும் கால்நடைகள் வளர்த்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இக்குழுவின் தலைவி தமிழ்ச்செல்வி கூறுகையில், “பிறரிடம் கையேந்திய நாங்கள், பிறருக்கு கைகொடுக்கும் வண்ணம் எங்களின் வாழ்க்கையே மாறி உள்ளது. தற்போது நாங்கள் தொழில்கள் மேற்கொண்டு குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 5,000/ வரை வருவாய் பெற்று வருகிறோம். நாங்கள் வாழ்வதற்கும், சமுதாயத்தில் மதிக்கப்படுவதற்கும் உதவி புரிந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்’ என்று கூறினார்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகள்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராஜக்காள் மங்கலம் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் 30 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டு வருகின்றன. அனைத்துக் குழுக்களுக்கும் முறையாக பயிற்சி வழங்கப்பட்டு, வங்கி கடன் இணைப்பு பெற்று, பல்வேறு வகையான தொழில் களை செய்து வருகின்றன. இக்கூட்டமைப்பின் மூலம் இராஜக்காள்மங்கலம் தொடக்க வேளாண்மை வங்கியில் ரூ. 32 இலட்சம் பெற்று, அந்தத் தொகையை உறுப்பினர் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டு, அதன் மூலம் கூடை முடைதல், ஆடு, மாடு வளர்ப்பு மற்றும் தையல் தொழில் போன்றவற்றை செய்து வருகின்றனர். தற்போது கூட்டமைப்பின் சார்பில் மேற்படி வங்கியில் பெருங்கடனாக ரூ. ஒரு கோடி பெற திட்ட அறிக்கை சமர்ப்பித்து, நிதி பெறுவதற்கான நிர்வாக அனுமதியும் பெற்றுள்ளனர். சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மூலம் தாங்கள் சமூக மற்றும் பொருளாதா ரீதியாக முன்னேற்றம் அடைந்தள்ளதாக பெருமையுடன் கூறுகின்றனர் இராஜக்காள்மங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள்.



மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்திடுவோம்!

வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், சிந்தனக்குடி ஊராட்சியில், காலனி தெருவில் வசித்து வருபவர் திருமதி. மேரி, (வயது 36). இவருக்கு பிறவியிலேயே ஒரு கால் வளைந்து சிறுத்து இருக்கும். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவரால் 8ஆம் வகுப்பிற்கு மேல் படிப்பை தொடர முடியவில்லை. தனது உறவினரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு ஒரு மகள் இருக்கிறார். இவரின் ஊனத்தைக் காரணமாக வைத்து இவரின் கணவர் இவரை விட்டு பிரிந்து விட்டார்.

மிகவும் வறுமையான நிலையில் தனது வாழ்க்கையை நடத்தி வந்த இவரை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் களப்பகுதி ஒருங்கிணைப்பாளர் சந்தித்து, வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக தையல் பயிற்சி அளிக்கப்படும் விபரத்தை சொல்லி, இவருக்கு 3 மாத தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை முடித்த பிறகு தையல் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தார் மேரி.

திருவாரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் பரிந்துரையில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர் அவர்கள், திருமதி. மேரிக்கு ஒரு தையல் இயந்திரம் வழங்கினார்கள். தற்போது மேரி தனது கிராமத்தில் ஒரு தையல் கடை வைத்து, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகளைத் தைத்து தரும் பணி செய்து வருகிறார். இப்பணியின் மூலம் தற்போது கணிசமான வருவாய் பெற்று வரும் திருமதி. மேரி, தனக்கு வளமான வாழ்வுக்கு வழி ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், திருவாரூர் மாவட்ட மகளிர் திட்டத்திற்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. மேரி.

வளரும் குழந்தைகளுக்கு ஏற்ற சத்தான உணவுகள்

வளரும் பருவத்தில் குழந்தைகள் சாப்பிடும் உணவு சுவையாக இருந்தால் மட்டும் போதாது, சத்தானதாகவும் இருக்க வேண்டும். பொதுவாக ஒரு வயதில் இருந்து ஆறு வயது வரை இரு பாலருக்கும் ஒரே மாதிரியான ஊட்டச் சத்துக்கள் தான் தேவைப்படும். ஏழு வயது முதல் இருபாலருக்கும் தேவைப்படும் ஊட்டச் சத்துக்களில் சிறிது மாற்றம் ஏற்படும். இந்த வயதில் சிறுவர்களை விட சிறுமியருக்கு ஹார்மோன் மாற்றங்களால் அதிக எடை கூடும். ஒரு வயது முதல் 12 வயது வரையிலான குழந்தைகளுக்கு சரியான உடல் எடை, அவர்களுக்குத் தினமும் தேவைப்படும் சத்துக்கள். அவைகள் கிடைக்கக் கூடிய உணவு வகைகள் ஆகியவற்றைப் பற்றி மருத்துவர்கள் தந்துள்ள விபரங்களைப் பார்க்கலாம் வாருங்கள். முக்கியமாக உங்கள் குழந்தைகளை உணவை ருசித்து, நன்றாக மென்று, உமிழ் நீருடன் கலந்து சாப்பிட உற்சாகப்படுத்துங்கள்.

ஒன்று முதல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் உணவுகள்

சைவமாக இருந்தால் :

- அரிசி / கோதுமை 120 கிராம்,
- பருப்பு 50 கிராம்,
- கீரை 50 கிராம்,
- காய்கறிகள் 30 கிராம்,
- பால் 600 மி.லிட்டர்,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 20 மில்லி கிராம்,
- சர்க்கரை / வெல்லம் 30 கிராம்.

அசைவமாக இருந்தால் :

- அரிசி / கோதுமை 120 கிராம்,
- பருப்பு 40 கிராம்,
- கீரை 50 கிராம்,
- காய்கறிகள் 30 கிராம்,
- பால் 400 மி.லிட்டர்,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 20 கிராம்,
- வெல்லம் 30 கிராம்,
- மீன் / முட்டை / சிக்கன் / மட்டன் 30 கிராம்

நான்கு முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் உணவுகள்

சைவமாக இருந்தால் :

- அரிசி / கோதுமை 170 கிராம்,
- பருப்பு 60 கிராம்,
- கீரை 75 கிராம்,
- காய்கறிகள் 50 கிராம்,
- பால் 600 மில்லி,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 25 மி.கிராம்,
- சர்க்கரை / வெல்லம் 40 கிராம்.

அசைவமாக இருந்தால் :

- அரிசி / கோதுமை 170 கிராம்,
- பருப்பு 50 கிராம்,
- கீரை 75 கிராம்,
- காய்கறிகள் 50 கிராம்,
- பால் 400 மில்லி,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 20 கிராம்,
- சர்க்கரை / வெல்லம் 40 கிராம்,
- மீன் / முட்டை / சிக்கன் / மட்டன் 50 கிராம்

ஏழு முதல் ஒன்பது வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் உணவுகள்

சைவமாக இருந்தால்

- அரிசி / கோதுமை 220 கிராம்,
- பருப்பு 70 கிராம்,
- கீரை 75 கிராம்,
- காய்கறிகள் 50 கிராம்,
- பால் 600 மி.கிராம்,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 30 கிராம்,
- சர்க்கரை / வெல்லம் 30 கிராம்,
- வேர்க் கடலை 30 கிராம்.

அசைவமாக இருந்தால்

- அரிசி / கோதுமை 220 கிராம்,
- பருப்பு 60 கிராம்,
- கீரை 75 கிராம்,
- காய்கறிகள் 50 கிராம்,
- பால் 400 மில்லி கிராம்,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 30 கிராம்,
- மீன் / முட்டை / சிக்கன் / மட்டன் 60 கிராம்,
- வேர்க்கடலை 30 கிராம்.

பத்து முதல் பனிரெண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் உணவுகள்

சைவமாக இருந்தால்

- அரிசி / கோதுமை 290 கிராம்,
- பருப்பு 70 கிராம்,
- கீரை 100 கிராம்,
- காய்கறிகள் 75 கிராம்,
- பால் 600 மில்லி,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 30 கிராம்,
- வெல்லம் 30 கிராம்,
- வேர்க்கடலை 40 கிராம்

அசைவமாக இருந்தால்

- அரிசி / கோதுமை 290 கிராம்,
- பருப்பு 60 கிராம்,
- கீரை 75 கிராம்,
- காய்கறிகள் 75 கிராம்,
- பால் 400 மில்லி கிராம்,
- பழங்கள் 100 கிராம்,
- ஆயில் 30 கிராம்,
- வெல்லம் 30 கிராம்,
- வேர்க்கடலை 60 கிராம்,
- மீன் / முட்டை / சிக்கன் / மட்டன் 60 கிராம்.

வட்டார இ-சேவை மையத்தின் மூலம்

வாழ்வாதாரம் உயர்ந்த வெற்றிக்கதை

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், முழுக்கோடு கிராமத்தில் வசித்து வருபவர் திருமதி. த. ஜெபந்தா (வயது 29). மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் 10ஆம் வகுப்பு வரை பள்ளியில் படித்து விட்டு, தொலைதூரக் கல்வி முறையில் 12ஆம் வகுப்பு, Computer (COA), PGDCA, Typewritting Tamil & English படித்துள்ளார். இவரின் கணவர் கூலி வேலைக்குச் செல்பவர். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

இவர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதுடன், மாற்றுத் திறனாளி பயிற்றுநராகவும் உள்ளதால் மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து அவர்களை குழுவாக ஒருங்கிணைத்து, அவர்களுக்கு வங்கிக் கடன் போன்றவை பெற்றுத் தரும் பணியில் ஈடுபட்டு வந்தார். போதிய வருவாய் இல்லாமல் சிரமப்பட்டு வந்த நிலையில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இ-சேவை மைய கணினி இயக்குபவர் பணிக்கு பணியாளர் தேவை என்பதை அறிந்து, அப்பணிக்கு விண்ணப்பித்து

மேல்புறம் ஊராட்சி ஒன்றிய இ-சேவை மையத்தில் பணிக்கு சேர்ந்தார்.

ஆரம்பத்தில் போதுமான வருவாய் இல்லாமல் சிரமப்பட்டார். பின்னர் படிப்படியாக இ-சேவை மையம் நன்றாக செயல்படத் துவங்கியது. தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் பெற்று வரும் திருமதி. ஜெபந்தா, தனது குடும்பத்தின் வறுமை நீங்க வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

வாழ்வில் முன்னேற்றம் தந்த மகளிர் திட்டம்

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், பெரம்பூர் ஊராட்சியில் வசித்து வரும் விஜயலட்சுமி மகளிர் திட்டம் மூலம் வாழ்வாதாரம் பெற்றுள்ளார். தனது வெற்றி குறித்து விஜயலட்சுமி கூறும் போது, ''மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது திருமணத்திற்குப் பின் எனது பிறந்த வீட்டிற்கே திரும்பி வரும் சூழல் ஏற்பட்டதால், என் தாயாரின் வருமானத்தில் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தேன். அச்சமயத்தில் எங்கள் பகுதியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைப்பதற்காக மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டு, அதில் என்னை ஏழை பிரிவில் சேர்த்தார்கள். 12ஆம் வகுப்பு வரை நான் படித்துள்ளதால் எனக்கு பொருளாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. சமுதாய வழிகாட்டி (Com) பயிற்சியும் பெற்றேன்.

இந்நிலையில் மகளிர் திட்டத்தின் மூலம் அழகுக் கலை பயிற்சி பெற்ற நான், சொந்தமாக அழகு நிலையம் வைக்க ஆசைப்பட்டேன். ஆனால் அதற்கான பொருட்கள் வாங்க என்னிடம் வசதி இல்லாததால், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ரூ. 20,000/- கடன் பெற்று அழகுக் கலைக்குத் தேவையான பொருட்களை வாங்கி தொழில் மேற்கொண்டு வந்ததுடன், கிடைத்த வருவாயில் கடனையும் திரும்பச் செலுத்தி விட்டேன். எனது பகுதியில் இருக்கும் களப்பகுதி ஒருங்கிணைப்பாளரின் ஆலோசனையின்படி, அழகு நிலையம் வைக்கத் தேவையான முதலீட்டிற்காக மாவட்ட தொழில் முனைவோர் மையத்தில் விண்ணப்பித்து, நேரடி கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு ரூ. 1 லட்சம் கடன் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டு, முதல் தவணையாக ரூ. 50 ஆயிரம் பெற்று தனது வீட்டின் அருகில் சிறிய அளவிலான கடை ஒன்றில் அழகு நிலையம் துவக்கியுள்ளேன். இதன் மூலம் மாதந்தோறும் ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது.

சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 30 நாட்கள் நடைபெற்ற மாடித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சிக்கு, எங்களது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சார்பில் என்னை அனுப்பி வைத்தனர். பயிற்சிக்குப் பின்னர் தற்போது நான் திருவாரூர் மாவட்டம் மட்டுமல்லாது பிற மாவட்டங்களுக்கும் சென்று மாடித் தோட்டம் அமைக்க பயிற்சி வழங்கி வருகிறேன். எனது வாழ்வில் வளம் ஏற்பட்டிட வழி அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

குதிரைவாலி பொங்கல்

குதிரைவாலி அரிசி ஒரு வகை சிறு தானியம். நம் அரிசியில் பொங்கல், உப்புமா செய்வது போல் , குதிரைவாலி பொங்கல் செய்து பார்த்ததில் மிகவும் சுவையாக இருந்தது. புரதம், நார்ச் சத்து, விட்டமின்கள் நிறைந்து காணப்படுகிறது. குதிரைவாலிப் பொங்கல் செய்முறை பார்ப்போமா?

தேவையானவை : குதிரைவாலி அரிசி 1 கப், பாசி பருப்பு 1/4 கப், மிளகு ஒரு ஸ்பூன், சீரகம் ஒரு ஸ்பூன், முந்திரி சிறிது, நெய் இரண்டு ஸ்பூன், இஞ்சி ஒரு சிறிய துண்டு (நறுக்கியது), கறிவேப்பிலை சிறிது, உப்பு தேவைக்கேற்ப.

செய்முறை: பாசிப்பருப்பை லேசாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். பின்னர் குதிரைவாலி அரிசியைக் களைந்து, வறுத்த பாசிப்பருப்புடன் கலந்து மூன்று கப் தண்ணீர் ஊற்றி குக்கரில் வைத்து 3 அல்லது 4 விசில் வரும் வரை வைத்து, பின்பு கேசை நிறுத்தி விடவும். நன்கு ஆறியவுடன், குக்கரை திறந்து, வெந்த குதிரைவாலி அரிசி பருப்பு இரண்டையும் கரண்டியால் லேசாக மசிக்கவும். கெட்டியாக இருந்தால் வெந்நீர் ஊற்றி உங்களுக்கு வேண்டுமளவிற்குத் தளர்த்திக் கொள்ளலாம். தேவைக்கேற்ப உப்பு சேர்க்கவும். பின்பு வாணலியை அடுப்பில் வைத்து நெய் விடவும், சூடானதும், மிளகு, சீரகம், முந்திரி போட்டு சிவக்க வறுக்கவும். சிவந்ததும், இஞ்சி கறிவேப்பிலை சேர்த்து பொங்கலில் போடவும். மிகவும் மணமாகவும், ருசியாகவும் இருக்கும். தேங்காய் சட்னியுடன் பொங்கலை சூடாக சாப்பிடவும்.

குறிப்பு : குதிரைவாலி அரிசி வெந்ததும் அளவில் நிறைய ஆகிவிடும்.அதனால் முதல் முறை செய்யும் போது சற்று கவனமாக அளவைக் குறைத்துப் போட்டுக் கொள்ளவும். அதே போல் கொஞ்சம் சாப்பிட்டாலே திருப்தியாக இருக்கும் . வெகு நேரத்திற்கு பசியெடுக்காது.

- திருமதி சசிகலா ராஜமன்னார், மேற்கு மாம்பலம், சென்னை.

வெந்தயத்தின் பயன்கள்

வெந்தயத்தில் நீர்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்பு சத்து, மாவுச்சத்து போன்றவைகள் உள்ளன. மேலும் சுண்ணாம்பு சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து, சோடியசத்து, பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்களும், தயாமின், ரிபோபிளேவின், நிகோடினிக் அமிலம், வைட்டமின்-ஏ போன்றவைகளும் அடங்கியுள்ளன.

வெந்தயம் குளிர்ச்சியை உண்டாக்கும். சிறுநீரை பெருக்கும். துவர்ப்புத் தன்மை உடையது. வறட்சி அகற்றும் தன்மை கொண்டது. விதையிலுள்ள ஆல்க லாய்டுகள் பசியைக் கூட்டும். நரம்புகளைப் பலப் படுத்தும். கீரை குளிர்ச்சியை உண்டாக்கும் தன்மை கொண்டது. வெந்தயத்தை வறுத்து, நீர் விட்டு காய்த்து தேன் சேர்த்து சாப்பிட வயிற்று கடுப்பு தீரும். திடீரென ஏற்படும் வயிற்று வலிக்கு வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடியாக்கி மோரில் கலந்து குடிக்க தீரும். தேங்காய் எண்ணெயில் வெந்தயம், கற்பூரத்தை போட்டு ஊற வைத்து தேய்த்து குளிக்க பேன், பொடுகு ஒழியும். பாலில் ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து தேய்த்து குளிக்க பேன், பொடுகு தீரும். வெந்தயம், பாசிப்பயறு இவற்றை இரவு ஊற வைத்து காலையில் அரைத்து உடலில் தேய்த்து குளிக்க கற்றாழை நாற்றம் நீங்கும். இதை தலையில் தேய்த்து குளிக்க முடி உதிராது. கண் குளிர்ச்சி ஏற்படும். தலைச்சூடு நீங்கும். பேன், பொடுகு, அரிப்பு நீங்கும். வெந்தயத்தை மாவாக்கி, இனிப்பு சேர்த்து களி போல கிளறி உண்டு வந்தால் நோய்கள் நீங்கும். உடல் சூட்டையும் கட்டுப்படுத்தும். மேலும் ஊற வைத்த வெந்தயத்தை அரைத்து பருக்கள் உள்ள இடத்தில் பூச, பரு மறையும்.

எளிய இயற்கை வைத்தியம்

நோய் வந்துவிட்டாலே உடனே மருத்துவரிடம் ஓடுவதைவிட, வீட்டிலுள்ள பொருட்களை கொண்டே எளிதாக குணப்படுத்தலாம்.

- தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.
- ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.
- சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.
- நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.
- வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயுதொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.
- வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.
- கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வர சரும நோய் குணமாகும்.
- ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வர மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.
- வெந்தயத்தை மட்டும் ஊற வைத்து நன்கு அரைத்து தலையின் முடி வேர்க் கால்களில் தடவி வைத்து நன்கு ஊறியபின் தலைமுடியை அலசினால் முடி நன்கு வளருவதுடன் கண் எரிச்சல், உடல் சூடு தணியும்.

தொகுப்பு: திருமதி. காந்திமதி சம்பு, எம்.ஏ., பி.எட்.,
மேட்டுத் தெரு, உடையாப்பட்டி, சேலம் மாவட்டம்.

கலை நிகழ்ச்சிகள் ஒத்தத் தொழில் குழு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், கண்ணூத்து குக்கிராமத்தில் ஒரே தொழில் செய்யும் 21 பெண்கள் ஒன்று சேர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஒத்தத் தொழில் குழு அமைத்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறும்போது, 'நாங்கள் மாத சேமிப்பாக ரூ. 50/- வசூல் செய்து வருகிறோம். வசூல் செய்த தொகையை வரவு செலவு செய்வதற்காக துவரங்குறிச்சி வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்கியுள்ளோம். நாங்கள் நாடகம், ட்ரம் செட், தப்பாட்டம் மற்றும் பல்வேறு கருவிகளைக் கொண்டு கலை நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம். இதன் மூலம் எங்களுக்கு நிரந்தரமாக தொழிலும், நிலையான வருவாயும் கிடைத்து வருகிறது.

மகளிர் திட்டத்தின் மூலம் ஊக்க நிதியாக பெற்ற ரூ. 1,00,000/-த்தை தொழிலை மேம்படுத்திக் கொள்ள தேவைப்படும் கலைப்பொருட்கள், உடை, ட்ரம் செட் போன்றவை வாங்கவும், உள்கடன் கொடுக்கவும் பயன்படுத்திக் கொண்டோம். எங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

மழை நீரை சேமிப்போம்...!
நீர் ஆதாரங்களை பாதுகாத்திடுவோம்...!

வாழ்வாதாரத் திட்டத்தினால் கிடைத்த வளம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், வேம்பனூர் குக்கிராமத்தில் வசித்து வரும் அங்குலட்சுமி, க/பெ. மருதுபாண்டியன். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அந்தக் குழந்தைகளைப் படிக்க வைக்க மிகவும் சிரமப்பட்டு வந்தார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அங்குலட்சுமிக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன்

செயல்படும் வேம்பனூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் விவசாயம் சாரா தொழிற்கடனாக ரூ. 15,000/- வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு பெட்டிக் கடை ஒன்றினை ஆரம்பித்த அங்குலட்சுமி, அந்தக் கடை அருகிலேயே பணியாரம் மற்றும் பலகாரங்கள் சுட்டு விற்பனை செய்ய ஆரம்பித்தார். தற்போது தினசரி கணிசமான அளவில் வருவாய் பெற்று வரும் அங்குலட்சுமி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

"சாலை விதிகளைக் கடைப்பிடித்திடுவோம்...!"

மாற்றுத் திறனாளியின் வெற்றிக் கதை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், எம். இடையப்பட்டி குக்கிராமத்தைச் சேர்ந்தவர் நல்லுச்சாமி, த/பெ. பழனிச்சாமி. ஒரு கால் மற்றும் ஒரு கை ஊனமுற்ற இவர் 5ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் எம். இடையப்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோருக்கு வழங்கும் தனிநபர் வட்டியில்லாத கடன் ரூ. 10,000/- பெற்று, புண்ணாக்கு மற்றும் தவிட்டுக் கடை வைத்து, அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறார். தன்னுடைய தேவைகளுக்காக பிறரின் உதவியை நாடி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தனக்கு, கடன் வழங்கி தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் நல்லுச்சாமி.

வங்கிகளில் கல்விக் கடன் பெறுவது எவ்வாறு?

இந்தியாவின் மிகப் பெரிய தேசிய வளம், அதன் இளைஞர்கள்தான். நன்கு படிக்கிற மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதில் பணப் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவுவதற்காக கல்விக் கடன் வழங்கும் திட்டம் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகிறது. மத்திய அரசு, ரிசர்வ் வங்கியின் அறிவுரையின்படி சுமார் 27 தேசியமயமாக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளும், சில தனியார் வங்கிகளும் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட வங்கி கல்விக் கடன் வழங்க வேண்டும் என்று மாநில அரசும் நிர்ணயித்துள்ளது. இந்த தகவலை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வங்கியும் கடன் பெறுவதற்குச் சில தகுதிகளை வகுத்திருக்கிறது. வட்டி விகிதம், அதனைச் திருப்பிச் செலுத்தும் விதம் போன்றவைகள் வங்கிக்கு வங்கி மாறுபடலாம்.

வங்கிக் கடன் பெற மாணவர்களுக்கு அடிப்படை தகுதிகள் ஏதேனும் உள்ளதா?

விண்ணப்பிப்பவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். நல்ல மதிப்பெண்ணுடன் எந்த கல்வி கற்கிறாரோ அதற்கான முழு தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

எந்தெந்தப் படிப்புகளுக்கு கல்விக் கடன் கிடைக்கும்?

பள்ளி, இளநிலை பட்டப் படிப்புகள், முதுநிலைப் பட்டப் படிப்புகள், முனைவர் பட்டப் படிப்புகள், பொறியியல், விவசாயம், மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டம், பல் மருத்துவம், மேலாண்மை, கணினித்துறை, பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட கணினி சான்றிதழ் படிப்புகள், CA, ICWA, CFA போன்ற படிப்புகள் போன்றவைகளுக்கும், வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட சில படிப்புகளுக்கும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. சான்றிதழ் படிப்புகளுக்குப் பொதுவாக வங்கிகள் கடன் வழங்குவதில்லை.

வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்க என்னென்ன ஆவணங்கள் தேவை?

மாணவரின் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 மதிப்பெண்கள் சான்றிதழ், கல்லூரியில் சேருவதற்கான அட்மிஷன் கார்டு, கல்லூரியின் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் குறித்த விவரம், புகைப்படங்கள், 6 முதல் 12 மாதங்கள் வரையிலான வங்கி அறிக்கை, கடந்த சில வருடங்களுக்கான வருமான வரி அறிக்கை, வருவாய் ஆதாரம், சொத்துக்கள், கடன்கள், வங்கிக் கணக்கு இல்லையெனில் மாணவரின் இருப்பிடச் சான்று, அடையாளச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்.

எவ்வளவு கல்விக் கடன் வழங்கப்படுகிறது?

பொதுவாக உள்நாட்டுப் படிப்புகளுக்கு நான்கு லட்சம் முதல் ஏழரை இலட்சம் ரூபாய் வரையிலும், வெளிநாட்டு படிப்புகளுக்கு ரூ. 20 லட்சம் வரையிலும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. வங்கிக் கடன் தொகை குறித்து வங்கி அலுவலர்களிடம் விபரம் அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனை திருப்பச் செலுத்துவது எவ்வாறு?

படிப்பை முடிக்கும் வரையில் கல்விக் கடனை திரும்பச் செலுத்த வேண்டியதில்லை. படிப்பு முடித்து ஒரு வருடம் அல்லது வேலைக்குச் சென்று 6 மாதம். இதில் எது முதலில் வருகிறதோ பின்னர் 6 முதல் 12 மாதம் வரை கால அவகாசம் வழங்கப்படும். அதற்குப் பின்னர் கடனை திரும்பச் செலுத்தினால் போதுமானது.

படிப்பை பாதியில் நிறுத்தினாலோ, ஒரு வருடத்திற்குள் வேலை கிடைக்கவில்லை என்றாலோ கடனை எப்படி திரும்ப செலுத்த வேண்டுமா?

இத்தகைய சூழ்நிலையில் உடனடியாக கல்விக் கடனை வங்கிக்கு கட்ட வேண்டும். இருப்பினும் வங்கியில் இது குறித்த விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கான வட்டி எவ்வளவு கணக்கிடப்படும்?

படிப்பை முடிக்கும் வரை சாதாரண வட்டி விகிதம்தான் கணக்கிடப்படும். இந்தக் கால கட்டத்தில் நீங்கள் விரும்பினால் வட்டியை மட்டும் வங்கிக்கு செலுத்தலாம் அல்லது செலுத்தாமலும் இருக்கலாம். வேலை கிடைத்த பின் வட்டியும் அசலும் வங்கிக்கு செலுத்த வேண்டும். இருப்பினும் வங்கியின் அலுவலர்களிடம் வட்டி குறித்த விபரங்களை கேட்டுக் கொள்வது அவசியம்.

கல்விக் கடன் பெறுவதற்கு சொத்துக்களை ஈடாக வைக்க வேண்டுமா?

4 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு ஈடாக எதையும் வைக்கத் தேவையில்லை. அதேசமயம் கடன் ஆவணங்களில் மாணவர், அவருடைய பெற்றோர் அல்லது காப்பாளர் கையெழுத்திட வேண்டும்.

ரூ. 4 லட்சத்துக்கு மேல், ரூ. 7.50 லட்சத்துக்குள் கடன் பெற்றால், இந்த ஆவணங்கள் மட்டும் போதாது. கூடுதலாக, நீங்கள் கடனை திரும்பச் செலுத்தி விடுவீர்கள் என்று உத்தரவாதம் அளித்து ஒருவர் கையெழுத்திட வேண்டும்.

ரூ. 7.5 லட்சத்துக்கு மேல் உள்ள கடன்களுக்கு நீங்கள் ஏதேனும் சொத்து அல்லது முதலீட்டுப் பத்திரங்களை வங்கிக்குத் தர வேண்டியிருக்கும். (உதாரணமாக தேசிய சேமிப்புப் பத்திரங்கள், காப்பீட்டு பத்திரங்கள், வங்கி முதலீடுகள், வீடு, நிலம், தங்கம் போன்ற சொத்துக்கள்)

நீங்கள் வழங்கும் சொத்துக்கள் அல்லது முதலீட்டுப் பத்திரங்கள் தான் வங்கிக்கான உத்தரவாதம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாவிட்டால், வங்கி நீங்கள் ஈடாக வைத்த சொத்துக்களை விற்றுத் தங்களுக்கு சேர வேண்டிய தொகையை திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். ரூ. 4 லட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு வங்கிகள் தனிநபர் உத்தரவாதம் மற்றும் சொத்து / முதலீட்டுப் பத்திரங்களை ஈடாக கேட்கலாம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாதபட்சத்தில் வங்கி உங்களுக்கு உத்தரவாதம் வழங்கியவர்களிடமிருந்து கடன் தொகையை செலுத்தும்படி கோரலாம். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

சொத்துக்களோ, தொடர்ச்சியான வருமானமே இல்லை என்றால் கல்விக் கடன் பெற முடியுமா?

கல்விக் கடன் என்பது மாணவர்களின் படிப்புத் திறமையைப் பொறுத்து வழங்கப்படுகிறது. அந்தக் கடன் சரியான நேரத்தில் திரும்பச் செலுத்த வேண்டியது உங்களின் கடமையாகும். திறமை உள்ள எவருக்கும் படிப்பதற்கான வாய்ப்பு தரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வங்கிகள் பலவிதங்களிலும் உதவுகின்றன.

கல்லூரியில் பல்வேறு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. எந்தெந்த தேவைகளுக்கு கல்விக் கடன் வழங்கப்படும்?

கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், டியூசன் கட்டணம், தேர்வுக் கட்டணம், நூலகம்/ஆய்வுக் கட்டணம், புத்தகம், சீருடை போன்றவை வாங்குவதற்கான கட்டணம், வெளிநாட்டுப் படிப்பிற்கான பயணச் செலவு போன்ற செலவினங்களுக்கான தொகையை கல்விக் கடனில் செலுத்த முடியும். மற்றபடி தனியார் கல்லூரிகளில் கேட்கப்படும் நன்கொடை, நுழைவு நன்கொடை (கேப்பிடேஷன் பீஸ்) போன்றவற்றுக்கு கல்விக் கடன் கிடைக்காது. தேர்வுக் கட்டணம் போன்றவை குறித்து முன்கூட்டியே குறிப்பிடுவது நல்லது. படிப்பிற்கு கம்ப்யூட்டர் தேவைப்பட்டால் அதை வாங்குவதற்கு சில வங்கிகள் கடன் தருகின்றன. இருப்பினும் வங்கியைத் தொடர்பு கொண்டு எந்தெந்த செலவினங்களுக்கு கடன் தரப்படுகிறது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

வங்கிகள் இல்லாத ஊரில் வசிப்பவர்கள் கல்வி கடன் எங்கு பெறுவது?

அருகில் உள்ள ஊர்களில் வங்கிக் கிளைகள் இருந்தால் அந்த வங்கிக் கிளைகளில் கல்விக் கடன் கோரலாம்.

கல்விக் கடன் நிராகரிக்கப்படுவது ஏன் என்று தெரிந்து கொள்ள முடியுமா?

வங்கியில் உங்களுக்கு விண்ணப்பத்தை நிராகரிக்கும் போதே, ஏன் உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது என்ற காரணத்தையும் சொல்வார்கள்.

கல்விச் செலவு முழுவதற்கும் கல்விக் கடன் கிடைக்குமா?

கல்விச் செலவு முழுவதற்கும் வங்கிக் கடன் கிடைக்காது. குறிப்பிட்ட விழுக்காடு தொகையை குறைத்துக் கொண்டுதான் வங்கிகள் கடன் வழங்கும். உள்நாட்டு படிப்புகளுக்கும் வெளிநாட்டு படிப்புகளுக்கும் இந்த பிடித்த தொகை விகிதம் மாறுபடும். எனினும் வங்கியில் இது குறித்த விபரங்களை கேட்டுக் கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கு பரீசிலனை கட்டணம் செலுத்த வேண்டுமா?

கல்விக் கடன்களுக்கு பரிசீலனைக் கட்டணம் எதையும் பெரும்பாலும் வங்கிகள் வசூலிப்பதில்லை. இருப்பினும் வங்கிக்கு வங்கி இந்த முறை மாறுபடலாம்.

கல்விக் கடனை எத்தன ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும்?

பொதுவாக கல்விக் கடன்களை ஐந்து முதல் ஏழு வருடங்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும். கடன் தொகை அதிகமாக இருப்பின் நீண்ட காலம் எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய கடன்களுக்கு எட்டு ஆண்டுகள் வரை மட்டுமே வருமான வரிச் சலுகைகள் உள்ளன. கடனை செலுத்த எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனால் வரிச்சலுகைகள் கிடைக்காது. எனவே விரைவில் கடனை செலுத்துவதே சிறந்தது.

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படும் என எந்த வங்கியும் சொல்வதில்லை. சில கல்வி நிறுவனங்கள் வங்கிகளுடன் இணைந்து கல்விக் கடன் வழங்கு ஏற்பாடுகளை செய்கின்றன. குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு அந்த வங்கிகளிலிருந்து சுலபமாகக் கடன் பெறலாம். இது குறித்து நீங்கள் படிக்க விரும்பும் கல்வி நிறுவனங்கள், கடன் கோரும் வங்கி ஆகியவற்றிடம் விசாரித்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத் தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடன் வாங்கப்படும் என்று எந்தவித கட்டுப்பாடும் வங்கிகளிடம் இல்லை. இருப்பினும் உங்களால் கடனை திரும்பச் செலுத்த முடியுமா என்பதை வங்கி அதிகாரிகள் ஆராய்ந்து உறுதி செய்வார்கள். ஏற்கனவே உங்கள் குடும்பத்தில் ஒருவர் கல்விக் கடன் பெற ஈடாக சொத்துப் பத்திரங்களை வங்கிக்கு அளித்திருந்தால், அதன் மதிப்பை கணக்கிட்டு, சொத்துக்களின் மதிப்பு அதிகமாக இருந்தால் அதை ஏற்றுக் கொண்டு கல்விக் கடன் வழங்க வங்கிகள் முன்வரலாம்.

கல்விக் கடனுக்கு காப்பீடு கிடைக்குமா?

சில வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உங்களுடைய கல்விக் கடனைப் பாதுகாக்கும் காப்பீடு ஒன்றினை எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். ஒருவேளை வங்கியால் கடனை உங்களிடமிருந்து வசூலிக்க முடியாவிட்டால், காப்பீட்டிலிருந்து கடன் தொகையை எடுத்துக் கொள்வார்கள்.

கல்விக் கடனுக்கு வருமான வரிச்சலுகை கிடைக்குமா?

நம் நாட்டின் வருமான வரிச்சட்டத்தின்படி கல்விச் செலவுகளுக்கு கீழ்க்கண்ட இரண்டு வகையில் வருமான வரிச் சலுகை பெறலாம்.

80சி பிரிவின்படி ஒருவர் தன்னுடைய குழந்தைகளுக்குச் செலுத்தும் பயிற்சிக் கட்டணத்துக்கு (டியூசன் ஃபீஸ்) ரூ. ஒரு லட்சம் வரை வருமான வரிச்சலுகை கிடைக்கும்.

ஒருவர் தானோ அல்லது தன் கணவர்/மனைவி/குழந்தைகளோ படிப்பதற்காகக் கல்விக் கடன் வாங்கியிருந்தால், அதற்குச் செலுத்தும் வட்டித் தொகைக்கு 80சி பிரிவின்படி எந்த வரம்புகளும் இல்லாமல் வரிச் சலுகை உண்டு.

மற்றபடி கல்விக் கடன்களுக்கு நேரடி வரிச் சலுகை எதுவும் இல்லை. இருப்பினும் வங்கி அதிகாரிகளிடம் இது குறித்த விபரங்களை தெரிந்து கொள்ளவும்.

கல்விக் கடன் பெறுவதில் வேறு ஏதேனும் பலன் உண்டா?

கல்விக் கடனுக்கு சில வங்கிகள் அரை சதவிகிதம் முதல் ஒரு சதவிகிதம் வரை குறைவாக வட்டி நிர்ணயம் செய்கின்றன. தனிநபர் காப்பீடு, குழு ஆயுள் காப்பீடு போன்ற வசதிகளையும் சில வங்கிகள் வழங்குகின்றன.

கல்விக் கடனை எந்த முறையில் வழங்குவார்கள்?

கல்விக் கட்டணம் நீங்கள் படிக்க சேரும் கல்வி நிறுவனத்திற்கு நேரடியாக வங்கி மூலம் வழங்கப்பட்டுவிடும். அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் படிப்பு செலவைத் தனிப் படிவத்தில் நிரப்பி விண்ணப்பம் அனுப்பினால், அந்தத் தொகையும் நேரடியாக கல்வி நிறுவனத்திற்கு அனுப்பப்படும். வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் அந்நாட்டு கரன்ஸியில் வழங்கப்படும். அதற்கான பரிமாற்ற செலவைப் பெரும்பாலும் மாணவர்கள்தான் ஏற்க வேண்டும்.

கல்விக் கடன் விண்ணப்பத்தை எவ்வாறு அனுப்புவது?

சில வங்கிகள் கடன் விண்ணப்பத்தை இணையதளம் வாயிலாக மட்டுமே அனுப்பும்படி சொல்கின்றன. சில வங்கிகள் பதிவுத் தபாலிலும் விண்ணப்பங்களை அனுப்பும்படி சொல்கின்றன. பதிவுத் தபாலில் அனுப்பினால் அதற்கான அத்தாட்சியை கைவசம் வைத்திருப்பது நல்லது.

கடன் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால் என்ன செய்வது?

கல்விக் கடன் கோரி நீங்கள் அனுப்பும் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால், வங்கி மேலாளரை நேரில் சந்தித்து உரிய காரணத்தை கேட்கலாம்.

திறமை மிகுந்த மாணவர்களின் படிப்பிற்கு எவ்வகையிலும் தடை ஏற்படக் கூடாது என்ற நோக்கத்துடன், வங்கிகள் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றன. அதில் ஒன்றுதான் கல்விக் கடன். இந்தக் கடன் தொகை தகுதி வாய்ந்தவர்களுக்கு கிடைக்க வேண்டும், அவர்கள் படிப்பில் சாதனை படைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஒன்றான கல்விக் கடனை பெற முயற்சிக்கும் மாணவர்களுக்கு பொதுவாக எழும் சந்தேகங்களை போக்கும் வகையில் இந்த கட்டுரையில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்விக் கடன் பெற முயற்சிக்கும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து வங்கிக்கு தரவும். வங்கி அதிகாரிகளிடம் பணிவாகவும், அவர்களின் கேள்விகளுக்கு உரிய பதில்களை பொறுமையுடனும் சொல்லவும். பெற்ற வங்கிக் கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதன் மூலம் பிற மாணவர்களும் பயன் பெற முடியும்.

எனவே மாணவர்களே கல்விக் கடன் பெற்று, சிறந்த முறையில் பயின்று வாழ்வில் வெற்றி பெற்று, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன் தரும் செயல்கள் பல புரிந்து சிறந்த குடிமகன் என்ற சிறப்பினை பெற வேண்டும் என்று முற்றம் உங்களை வாழ்த்துகிறது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

▪ திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

▪ திரு. எஸ். எஸ். குமார்,
இணை இயக்குநர்,
▪ திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சிறப்பு இனமாக செயல்படும் பண்ணைச் சார்ந்த வாழ்வாதார உபதொழில்கள்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் திட்டங்கள், திட்ட பகுதியில் உள்ள சூழலுக்கு ஏற்பவும், பயனாளிகளின் திறன்; தேவை மற்றும் அவர்களிடம் உள்ள வளங்களின் அடிப்படையில் பண்ணைச் சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் பலனாக பயனாளிகளுக்கு தனி நபராகவோ அல்லது கூட்டுப் பொறுப்புக் குழு வழியாகவோ நிரந்தர வாழ்வாதார வருமானத்திற்கு வழிவகுக்கப்படுகின்றது. இத்திட்டம் அனுபவமுள்ள தொண்டு நிறுவனங்கள் மூலம் செயலாக்கம் மேற்கொள்ளப்படுகிறது. சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் பண்ணைச் சார்ந்த உபதொழில்கள் கீழ்வருமாறு:

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 12 கடலோர ஊராட்சிகளிலிருந்து 2850 விவசாயிகள் பயன் படும் வகையில் மா / காய்கறிகள் / மருத்துவ பயிர்கள் போன்ற பண்ணைச் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன் மற்றும் மாகூழ் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றும் அப்பகுதி விவசாயிகள் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு (TKVK) மற்றும் நாகை ஆர்கானிக் விவசாயிகள் தயாரிப்பாளர்கள் நிறுவனம் (NOFPCL) இயங்கி வருகிறது.
2. கடலூர் மாவட்டத்தில் 9 கடலோர கிராமங்களில் 400 சுய உதவிக் குழு பெண்கள் தொகுப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இதன் மூலம் பால் விற்பனை மற்றும் தீவனம் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது.
3. இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் மற்றும் சிறு தானியங்கள் மதிப்பு கூட்டி சந்தைப்படுத்துவதற்கு 1000 விவசாயிகள் கொண்ட கூட்டமைப்பு அமைக்கப்பட்டு அப்பகுதி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அறுவடைக்குப் பின் பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவி ஒரு பொது வசதி மையம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
4. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பண்ணைச் சார்ந்த உபதொழில், மல்லிகை பதியன் உற்பத்தி மற்றும் மலர் விற்பனை மேற்கொள்ள இரண்டு கடலோர ஊராட்சிகளிலிருந்து 400 பெண் விவசாயிகள் பங்கேற்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.
5. புதுக்கோட்டை மாவட்டத்தில் 500 சுய உதவிக் குழு பெண்கள் ஆடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் பயன்படும் வகையில் ஆடு வளர்ப்பில் குறைந்தபட்சம் இறப்பு விகிதம் மற்றும் மேம்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மூலம் எளிய முறையிலான குறைந்த செலவு தொழில் நுட்பங்களின் பயிற்சி பெற்று பயன் அடைந்துள்ளனர்.
6. திருநெல்வேலி மாவட்டத்தில் 800 பெண் பயனாளிகள் முருங்கை சாகுபடி மேற்கொண்டு சந்தைப்படுத்தி வருமானத்தை பெருக்கும் வகையில் 11 ஊராட்சிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டு திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

மேலும், இத்திட்ட பயனாளிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஒருங்கிணைந்த உண்மையாக உழைக்கவும், திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட வழியில் செயல்பட்டு இத்திட்டத்தின் பலனாக அந்தந்த பயிர்களில் உற்பத்தியை அதிகரித்து மதிப்பு கூட்டுதல் செய்து விற்பனை மூலம் அதிக வருமானத்தை பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– **திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப.,**
கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர்,

உங்களுக்குத் தெரியுமா?

ஒரு பிளாஸ்டிக் பையின் சராசரி பயன் என்பது வெறும் 10 நிமிடங்களுக்கு மட்டும்தான். அது மக்க எடுத்துக் கொள்ளும் வருடங்கள் 100க்கு மேல். வெறும் 10 நிமிடம் நமக்கு நண்பனாக இருந்து விட்டு வாழ்க்கை முழுதும் நமக்கு எதிரியாய் இருக்கும் பிளாஸ்டிக் பை அவசியமா?

பிளாஸ்டிக் பயன்படுத்துவதைக் குறைப்போம். கடைகளுக்குச் செல்லும் போது ஒரு துணிப்பையை வைத்துக் கொள்வோம்.

நாகாத்தம்மன் கூட்டுப் பொறுப்புக் குழு தேங்காய் வியாபாரம்

காஞ்சிபுரம் மாவட்டம், தென்பட்டினம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. அனுபிரியா, திருமதி. உஷா, திருமதி. கல்பனா, திருமதி. ராணி மற்றும் திருமதி. தேவி ஆகியோர் ஒன்றிணைந்து சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் உதவியுடன் பல்லவன் கிராம வங்கியில் தேங்காய் வியாபாரம் செய்ய தங்களின் பங்களிப்பாக செலுத்திய ரூ. 7,500/, பல்லவன் கிராம வங்கி வழங்கிய ரூ. 1,42,500/ என மொத்தம் 1,50,000/ ரூபா யினைக் கொண்டு கடந்த 12.01.2017 அன்று நாகாத்தம்மன் கூட்டுப் பொறுப்புக் குழுவினைத் தொடங்கி, அதன் வாயிலாக தேங்காய் வியாபாரம் செய்யும் தொழிலைத் தொடங்கினார்கள்.

இத்தொழிலின் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருவதுடன், கடன் திருப்பமாக மாதம் ரூ. 7,500/ செலுத்தி வருகின்றனர். மேலும் ரூ. 95,000/ முதல் ரூ. 1,15,000/ வரை வருமானம் ஈட்டி வருகின்றனர். தற்போது திருமணம் மற்றும் பிற சுப நிகழ்ச்சிகளுக்குப் பெரிய அளவில் விற்பனை செய்து அதிக அளவில் இலாபம் பெற்று வருகின்றனர்.

தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நாகாத்தம்மன் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அன்னலெட்சுமி கூட்டுப் பொறுப்புக் குழு

கன்னியாகுமாரி மாவட்டம் இராஜாக்காமங்கலம் ஊராட்சியில் 21.11.2017 மலர் 4 குழுவை சேர்ந்த அன்னலெட்சுமி, கோமதி, புனிதா, சுபாஷினி, ராஜீ ஆகியோர் கூட்டுப் பொறுப்புக் குழுவாக இணைந்து முறுக்கு வியாபாரம் செய்யும் தொழிலை ஆரம்பித்தனர்.

நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் கடன் ரூ. 1,75,000/, பயனாளிகள் பங்கு தொகை ரூ. 12,500/, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பெற்ற நிதி ரூ. 62,500/ என மொத்தம் ரூ. 2,50,000/ யை முதலீடாகக் கொண்டு முறுக்கு செய்யும் தொழிலுக்கு தேவையானப் பொருட்களை வாங்கி கூட்டாக முறுக்கு வியாபார தொழிலை செய்ய ஆரம்பித்தனர். இப்போது இத்தொழில் நல்ல முறையில் செயல்படுத்தி வருமானம் ஈட்டி வருகின்றனர். வங்கியில் பெற்றக் கடனை மாதம் தவறாமல் ரூ. 13,000/ வீதம் செலுத்தி வருகின்றனர். இதுவரை கடன் மற்றும் அசல் தொகையாக மொத்தம் ரூ. 2,03,200/ செலுத்தியுள்ளனர். ரூ. 1,80,109/ இலாபம் ஈட்டி உள்ளனர். தங்களுடைய வாழ்க்கை தரம் உயரவும் தங்களை முதலாளிகளாக உயர்த்தவும் உதவி செய்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பழ வியாபாரம்- கூட்டுப் பொறுப்புக் குழு- திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் ஒபசமுத்திரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை சார்ந்த வானவில் மகளிர் சுய உதவி குழுவில் உள்ள 5 நபர்கள் ஒன்றிணைந்து சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பல்லவன் கிராம வங்கியில் ரூபாய் 95,000/ கடன் பெற்று பயனாளிகள் பங்களிப்பாக ரூபாய் 5,000/ செலுத்தி மொத்தமாக ரூபாய் 1,00,000/ கொண்டு பழ வியாபாரம் கூட்டு பொறுப்புக் குழு வினை கடந்த 02.06.2017 அன்று துவங்கினார்கள். இத்தொழிலில் பிரதி மாதம் செலவு போக ரூ. 20,000/ முதல் ரூ. 25,000/ வரை நிகர லாபமாக வருமானம் ஈட்டி வருகின்றனர். கடன் திருப்பமாக மாதம் தவறாமல் ரூபாய் 6,000/ என பல்லவன் கிராம வங்கியில் செலுத்தி 16 தவணையில் கடனை முடித்துள்ளனர். தற்போது மறுகடன் பெறுவதற்கு வங்கி மேலாளரை அணுகியுள்ளனர்.

``தினமும் கூலி வேலை செய்து கொண்டிருந்த எங்களை ஒன்றிணைத்து பயிற்சிகள் வழங்கி பல்லவன் கிராம வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்றுத் தந்து, எங்களை சிறு தொழில் செய்ய ஊக்குவித்து எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியமைக்கு சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்'' என்கின்றனர் பழ வியாபாரம் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள்.

தண்ணீரை நன்கு காய்ச்சி குடித்திடுவோம்...!

விடிவெள்ளி இறால் வியாபாரம் கூட்டுப் பொறுப்புக் குழு

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் குழுக்களில் ஒன்றான இளந்தென்றல் மகளிர் சுய உதவி குழுவில் உள்ள உறுப்பினர்களை பகுதி வள மைய பணியாளர்கள் சந்தித்து கூட்டு பொறுப்புக் குழுவைப் பற்றி விரிவாக எடுத்துரைத்து அவர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, 201516 ஆம் ஆண்டு அவர்களின் ஆர்வத்தால் விடிவெள்ளி இறால் வியாபாரம் என்னும் கூட்டு பொறுப்பு குழுவாக திருமதி. அமுதா, திருமதி. ஜெயலட்சுமி, திருமதி. சாந்தி, திருமதி. பாஞ்சாலி மற்றும் திருமதி. தெரேசா ஆகியோரை இணைத்து கூட்டு பொறுப்பு குழு உருவாக்கப்பட்டது.

லைட் ஹவுஸ் குப்பம் பகுதியில் இறால் (ம) மீன் வியாபாரம் என்து பூர்வீகத் தொழில் என்பதால் இக்குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு தொழில் பற்றிய முன் அனுபவம், இலாபம் மற்றும் நஷ்டம் ஆகியவை நன்கு அறிந்திருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு நாபின்ஸ் வங்கி உதவியுடன் 21.01.2016 அன்று ரூ. 1,42,500/ மற்றும் இவர்களின் பங்குத் தொகை ரூ. 7500/ ஆக மொத்தம் ரூ. 1,50,000/த்தை 36 தவணைகளில் திரும்ப செலுத்தக் கூடிய கடனாகப் பெற்றனர். இவர்களின் விற்பனை வருவாயை வைத்து செலுத்த வேண்டிய கடன் தொகையை அசல் மற்றும் வட்டியுடன் முழுமையாக ரூ. 1,58,100/ செலுத்தி கடனை முடித்து விட்டனர். மேலும், நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 3000 முதல் ரூ. 5000 வரை வருவாயாக ஈட்டி வருகின்றனர்.

தற்போது தொழிலை விரிவுபடுத்தலாம் என முடிவு எடுக்கப்பட்டு அதற்காக தற்போது பல்லவன் கிராம வங்கியின் மூலமாக ஒரு நபருக்கு ரூ. 50,000/ வீதம் 5 நபருக்கு ரூ. 2,50,000/ கடன் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட வழிகாட்டியாக இருந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு விடிவெள்ளி இறால் வியாபாரம் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் நன்றியினைத் தெரிவித்தனர்.

ஆடுகள் வளர்ப்பதின் மூலம் வருமானம் கிடைக்கும் வழிமுறைகள் குறித்த விளக்கக் கூட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தின் கீழ் செயல்படும் நான்கு கூட்டு வள மையங்களுக்கு (கிருஷ்ணாபுரிப்பட்டினம், மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல்) மதுரை சேவா என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் ஆடுகள் வளர்ப்பதின் வாயிலாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கக் கூட்டம் நடைபெற்றது. அதில் மாவட்ட செயலாக்க அலுவலர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர் மற்றும் சமுதாய வளர்ச்சி அலுவலர் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாக்க அலுவலர் அவர்கள் வறட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள பெண்களுக்கு ஆடுகள் வளர்ப்பதின் மூலம் வருமானம் கிடைக்கும் வழிமுறைகள் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மகளிருக்கு குறைந்த முதலீட்டின் மூலம் அதிக இலாபத்தினைப் பெற செய்ய வேண்டிய வழிமுறைகளை பற்றி எடுத்துக் கூறினார். வெள்ளாடுகள் தொழில் செய்யும் வழிமுறைகளை மற்றும் வெள்ளாடுகளை வளர்க்கும் முறைகள், கால்நடைகளுக்கு நல்ல காற்றோட்டம் கிடைப்பதற்குக் கொட்டகை அமைக்கும் முறைகள், கால்நடைகளுக்கு ஏற்படும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் போன்றவற்றிற்கு மசால் உருண்டை செய்யும் முறைகளை நேரடியாக மக்களுக்கு காண்பிக்கப்பட்டது மற்றும் காப்பீட்டு திட்டம் பற்றியும் இக்கூட்டத்தில் விளக்கமாகக் கூறப்பட்டது.

காப்பீடு மூலம் பயன் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை

என் பெயர் லெட்சுமி தங்கம், நான் கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்காமங்கலம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் மருத்துவ காப்பீட்டில் எங்கள் குடும்பத்திற்கு பிரீமிய மாக ரூ. 313/ செலுத்தி காப்பீட்டில் இணைந்திருந்தேன்.

எனது மகள் கடந்த 28.10.2018 அன்று காய்ச்சல் காரணமாக இராஜாக்காமங்கலம் PPM மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயர்ந்த சிகிச்சை பெற்று விரைவாக குணமடைந்தார். மேலும் அவர் சிகிச்சைக்கு உண்டான முழு தொகையையும் UIIC மூலம் வழங்கப்பட்டு நல்ல முறையில் வீடு திரும்பினார்.

நான் இந்த திட்டத்தில் காப்பீடு செய்யாமல் இருந்திருந்தால் என் மகளுக்கு தக்க சமயத்தில் மருத்துவம் செய்ய முடியாமல் அவதிப்பட்டிருப்பேன். இராஜாக்கமங்கலம் கூட்டமைப்பின் மூலம் மருத்துவ காப்பீட்டை அறிமுகப்படுத்தி மிகக் குறைந்த பிரீமியத்தில் அதிகம் பயன் பெற செய்தமைக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி.

சமுதாயப் பட்டறிவு பயணம்

ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர்களுக்கான துயர் குறைப்பு நிதி செயலாக்கம் தொடர்பாக மாவட்ட அளவிலான பயிற்சி

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் துயர் குறைப்பு நிதி செயலாக்கம் தொடர்பாக ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் புத்தக பராமரிப்பாளர்களுக்கு மாவட்ட அளவிலான பயிற்சி மாவட்ட செயலாக்க அலுவலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

அதில் சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு துயர் குறைப்பு நிதி செயலாக்கம் தொடர்பாக பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 29 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் (தலைவர், செயலாளர், பொருளாளர், இணைச் செயலாளர்) மற்றும் புத்தகப் பராமரிப்பாளர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு துயர் குறைப்பு நிதி செயல்படுத்துவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, துயர் குறைப்பு நிதி கடன் பெறுவதற்கான தகுதி, துயர் குறைப்பு நிதி வங்கி கணக்கு பராமரிப்பது, பதிவேடுகள் பராமரிப்பது, துயர் குறைப்பு நிதி கடன் வழங்கும் முறை மற்றும் கடன் திரும்ப செலுத்தும் முறை குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், துயர் குறைப்பு நிதி கடன் குறித்து விடுதலின்றி தீர்மானம் நிறைவேற்றி, அவை தீர்மானப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு செயலரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது தங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை ஆர்வத்துடன் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கேட்டறிந்தனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் அரசடி மற்றும் மணப்பாடு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு உறுப்பினர்களை, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் இராஜாக்காமங்கலம் மற்றும் பைங்குளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு மாவட்ட செயலாக்க அலுவலக சமுதாய வளர்ச்சி அலுவலர் மற்றும் நிறுவன வளர்ச்சி அலுவலர் தலைமையில் 20.11.2018 அன்று சமுதாய பட்டறிவு பயணமாக அழைத்து செல்லப்பட்டது. இராஜாக்கமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் புத்தக பராமரிப்பாளர் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் வழங்கப்பட்ட பதிவேடுகள் பராமரிப்பது தொடர்பாக குழு உறுப்பினர்களுக்கு தெளிவாக விளக்கினார்.

இராஜாக்காமங்கலம் மற்றும் பைங்குளம் வள ஆதார மைய ஒருங்கிணைப்பாளர்கள் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு விளக்கினர். மேலும், இராஜாக்காமங்கலம் மற்றும் பைங்குளம் வள ஆதார மைய வியாபார ஊக்குநர், கூட்டுப் பொறுப்புக் குழு அமைக்கும் முறை, குழுக்களுக்கு வழங்கப்படும் பயிற்சி, கடன் விவரம், வட்டி விகிதம், கடன் திருப்ப செலுத்துதல் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழு பதிவேடுகள் பராமரிப்பது போன்ற விபரங்களை விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து இராஜாக்காமங்கலம் ஊராட்சியில் அமைந்துள்ள சாண எரிவாயு கலன், நுண்கடன் மூலம் கயிறு உற்பத்தி செய்யும் தொழில் மற்றும் கூட்டுப் பொறுப்பு குழு மூலம் அமைத்துள்ள காய்கறி கடை போன்றவற்றை குழு உறுப்பினர்களை பார்வையிட்டனர். இப்பட்டறிவு பயணத்தில் 40 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வியாபார மேம்பாட்டு முகவர் மூலம் மகளிர் குழுக்களுக்கான கடனுதவி

கடலூர் மாவட்ட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் கவரப்பட்டு வள ஆதார மையத்திற்குட்பட்ட 8 ஊராட்சிகளிலுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பல்லவன் கிராம வங்கி, கிள்ளை மற்றும் சிதம்பரம் கிளை வங்கிகள் மூலம் 48 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1,71,15,000/ வங்கிக் கடனாக ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகள் மூலம் வியாபார மேம்பாட்டு முகவர் (ODC) சார்பாக கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடனுதவி மூலம் 580 மகளிர் குழு உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இதன் மூலம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது வாழ்வாதார மேம்பாட்டிற்குத் தேவையான விவசாயம் மற்றும் சிறு தொழிலுக்குப் பயன்படுத்தி தங்களது வாழ்வாதார மேம்பாட்டிற்கு முழுமையாகப் பயன்படுத்திவுள்ளார்கள்.

கவரப்பட்டு வள ஆதார மையத்திற்குட்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சார்பாக வியாபார மேம்பாட்டு முகவரி மூலம் வங்கிக் கடன் பெற்று தந்தமையால் கூட்டமைப்பிற்கு கடன் தொகையில் இருந்து வங்கியின் மூலம் 2 கோடி தொகையைப் பெற்று ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை வெற்றிகரமாக செயல்படுத்த வழிவகை செய்யப்படுகிறது.

உடலுக்கு நலம் தரும் சிறு தானியங்கள்

தானியங்கள் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தினை அளிக்கின்றன. அரிசி, கோதுமை, பார்லி, வரகு, கம்பு, சோளம், சாமை போன்ற தானியங்களை சமைத்து உண்பதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், கொழுப்பு சத்து குறையும், உடல் பருமன் ஏற்படாது.

கம்பு, சோளம்: கம்பில் புரதம், சுண்ணாம்பு, பாஸ்பரஸ் போன்ற தாதுக்களும் உயிர்ச்சத்துக்களும் உள்ளன. இது ஜீரண சக்தியை அதிகரிக்கும். உடல் வெப்பநிலையை சமநிலையில் வைத்திருக்கும். வேண்டாத கொழுப்புகளை கரைத்து பருமனைக் குறைக்கும். இது தாய் மார்களுக்கு பால் உற்பத்தியைப் பெருக்கும். உடல் வலிமையை அதிகமாக்கும்.

சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம் சத்துக்கள் அடங்கி உள்ளன. சோள உணவுகள் உடலுக்கு உறுதியை அளிக்க வல்லது. உடல் பருமனைக் குறைக்கும். வயிற்றுப்புண்ணை ஆற்றும். வாய் நாற்றத்தைப் போக்கும். மூலநோயாளிகளுக்கு சோள உணவு ஒத்துக் கொள்ளாது.

வரகு, ராகி: வரகில் புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்து உள்ளது. இது உடல் எடையை குறைக்கக்கூடியது. மாதவிடாய் கோளாறு கொண்ட பெண்கள் வரகைச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது.

ராகியில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து மற்றும் உயிர்ச் சத்துக்களும் இருக்கின்றன. இது உடல் உஷ்ணத்தை சமநிலையில் வைத்திருக்கும். குடலுக்கு வலிமை அளிக்கும். நீரிழிவு நோயாளிகள் கூட கேழ்வரகால் செய்த பண்டங்களைச் சாப்பிடலாம்.

சாமை: சாமை உணவு அனைத்து வயதினருக்கும் ஏற்றது. இது மலச்சிக்கலைப் போக்கும். வயிறு சம்பந்தமான நோய்களைக் கட்டுப்படுத்தும். நீரிழிவு நோயாளிகள் கூட சாமையில் தயாரித்த உணவை உண்ணலாம்.

கோதுமை, பார்லி: அரிசியைவிட கோதுமையில் அதிகமான சத்துகள் உள்ளன. கோதுமையில் புரதம், சர்க்கரை, சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்பு, கரோட்டின், நியாசிக் போன்ற பல சத்துக்கள் உள்ளன. இது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த உணவாகும். மலச்சிக்கல் உண்டாகாது.

குழந்தை முதல் முதியவர் வரை சாப்பிடத் தகுந்தது பார்லி. நோயுள்ளவர்களும், நோயற்றவர்களும் சாப்பிடலாம். இதைக் கஞ்சியாக காய்ச்சி குடிப்பர், உடலில் உள்ள தேவையற்ற நீரை வெளியேற்றி எடையைக் குறைக்கும். உடல் வறட்சியை போக்க வல்லது. நீடித்த மலச்சிக்கல் உள்ளவர்கள் பார்லியை சாப்பிட்டால் குணமாகும். காய்ச்சலை தடுக்கும். வெப்பநிலையை சமநிலையில் வைத்திருக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரிய உதவும். குடல் புண்ணை ஆற்றும். இருமலைத் தணிக்கும். எலும்புகளுக்கு உறுதி தரும்.

– திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்.ஏ., எம்.எட்..
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) - தேசிய வள மையம் (NRO)

மேற்கு வங்காள மாநில சுய உதவிக் குழு கூட்டமைப்புகளின் செயலாளர்களுக்கான பட்டறிவுப் பயணம் மற்றும் பயிற்சி

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் மற்றும் தேசிய வள மையமானது (TNVRC - NRO) மேற்கு வங்காள மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் (WBSRLM) கடந்த மூன்று ஆண்டுகளாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான கூட்டமைப்புகளை அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதலுக்கான பணியினை செய்து வருகிறது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கு வங்காள மாநில சுய உதவிக் குழு கூட்டமைப்புகளின் செயலாளர்களுக்கான பட்டறிவுப் பயணம் மற்றும் திட்டம் உள்வாங்கும் பயிற்சி 11.02.2019 முதல் 15.02.2019 வரை வேலூர் மாவட்டத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியை வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட மகமை எடுத்து நடத்திக் கொடுத்தது. இந்தப் பயிற்சியை மாவட்ட

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட திட்ட இயக்குநர் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் வகுப்பறை பயிற்சியும், மூன்று நாட்கள் பட்டறிவுப் பயணமும் மேற்கொள்ளப் பட்டது.

பயிற்சியின் இறுதி நாளில் அனைத்து பங்கேற்பாளர்களும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப் படும் மகளிர் குழுக்கள், இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி, வாழ்வாதார செயல்பாடுகள், இரண்டாம் நிலை நிறுவன கூட்டமைப்புகள், மகளிர் உற்பத்திப் பொருட்கள் மற்றும் நலிவுற்றோர், மாற்றுத் திறனாளி களுக்கான செயல்பாடுகள் ஆகியவற்றை அறிந்து கொண்டனர்.

இதன் மூலம் தங்களுடைய மாநிலத்தில் மகளிர் மேம்பாட்டிற்கான பணிகளை திறம்பட மேற்கொள்ள இப்பயிற்சி உதவியாக இருக்கும் என தெரிவித்தார்கள்.

மேலும் நமது மாநிலத்தில் உள்ள அனைத்து செயல்பாடுகளையும் ஆர்வமுடன் கற்றுக் கொண்டு, தங்களுடைய சந்தேகங்களை தேசிய வள மேலாளரிடமும், பயிற்றுனர்களிடமும் உடனுக்குடன் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (60,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மாநில திட்டக் குழுவின் கீழ் செயல்படும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலம் மாதவிடாய் சுகாதார மேலாண்மை செயல்பாடுகள் ‘மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு மூலம் பெண்கள் நலனை மேம்படுத்துதல்’ என்ற திட்டம் மூலம் செயல்படுத்துகிறது. தமிழகத்தின் 105 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்து பயிற்சி பெற்ற 130 சமுதாய வளப் பயிற்றுனர்களுக்கு 31.05.2019 மற்றும் 01.06.2019 ஆகிய இரண்டு நாட்கள் புத்தாக்கப் பயிற்சி அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் கலந்த கொண்டவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. ஜா. சம்பத் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியில் கலந்து கொண்டவர்களை வாழ்த்தினர்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month







21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 180/-
இரண்டு ஆண்டு	ரூ. 360/-
மூன்று ஆண்டு	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.